# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே,வாரும்.வெளி.22:20

சகோ. காலேப் யோசுவா

2வது குறுக்குத் தெரு, 11.திருமால் நகர்
பூவிருந்தவல்லி, சென்னை. 600 056

## திருமண முத்தம் செய்தித்தொகுப்பிற்கு எதிரான வழக்கு விசாரணை

| | | |
|---|---|---|
| 1. வழக்கின் முகாந்தரம் | : | தீர்க்கத்தரிசியின் விவாக ஆராதனையில் காணப்படும் திருமண முத்தம் சென்னை, பெரவலூர், சென்னை சபையில் கடைப் பிடிக்கப்பட்டு ஒரு உபதேசமாக இருந்து வருகிறது. அதற்கு விரோதமாக பிரதிவாதி ஒரு செய்தித்தொகுப்பு வெளியிட்டு செய்தியை நன்கு அறிந்த, ஒரு பெரிய சபை பாஸ்டராகிய ஐசக் வசந்தக்குமார் அவர்களை அவமதித்து விட்டார். அவருடைய பெயருக்கு களங்கம் ஏற்படுத்தி விட்டார். |
| 2. வாதி | : | சென்னை, பெரவலூர், சென்னை சபை பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் |
| 3. பிரதிவாதி | : | சுவிசேஷகன் காலேப் யோசுவா |
| 4. விசாரணை இடம் | : | சென்னை, பெரவலூர், பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் இல்லத்தின் முகப்பு ஹால். |
| 5. விசாரணை நேரம் | : | 2004-ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 22-ம் தேதி, ஞாயிறு மதியம் 2.30 மணி. |
| 6. வாதியின் வக்கீல் | : | சென்னை, பெரவலூர், சென்னை சபையைச் சார்ந்த ஐந்து சகோதரர்கள் |
| 7. பி. வா. வக்கீல் | : | பரிசுத்த ஆவி |
| 8. வா.மூத்த வக்கீல் மற்றும் நீதிபதி | : | சென்னை சபையில் கேசியோ இசைக்கும் சகோதரர். இவர் ஒரு போக்குவரத்துக் காவலர் |

1. கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர்களுக்கும்; சென்னை, பெரவலூர், சென்னை சபையினருக்கும் கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய ஏற்படுத்தப்பட்டவனாகிய சுவிசேஷகன் காலேப் யோசுவா எழுதுகிறதாவது:
நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2. பிரதானமாக நீங்கள் இங்கு கவனிக்கவேண்டியது என்னவென்றால்: இந்த வழக்கு காலேப் யோசுவா என்பவருக்கும், ஐசக் வசந்தக்குமார் என்பவருக்கும் இடையிலுள்ள குடும்பப் பிரச்சனைகளினால் எழுந்தது அல்ல. மாறாக இது கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைவதற்கு தன்னை பாஸ்டராக ஏற்படுத்தினார் என்று கூறும் ஐசக் வசந்தக்குமார் என்பவருக்கும், தன்னை சுவிசேஷகனாக ஏற்படுத்தியுள்ளார் என்று கூறும் காலேப் யோசுவாவுக்கும், தேவனுடைய சபையில் உபதேசங்களுக்கடுத்த விஷயத்தில் உண்டான வழக்கு ஆகும்.

3. பிரதிவாதியாகிய நான் என்னுடைய வழக்கத்தின்படி ஆகஸ்ட் மாதம் நான்காவது வாரம், 22-ம் தேதி சென்னை சபைக்குச் சென்றிருந்தேன். நான் அன்று சபைக்கு வருவது குறித்தும், சென்னை சபையின் இரு உபதேசங்கள் அதாவது திருமண முத்தம், மாலை வேளையில் கர்த்தருடைய இராப்போஜனம் ஆசரிப்பு விஷயத்தில் எனக்கு ஆவியில் ஒருமனப்பாடு இல்லாதது குறித்தும், மேலும் இது தவறு என நான் ஒரு செய்தித்தொகுப்பு எழுத இருப்பது குறித்தும் பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாருக்கு ஏற்கனவே ஒரு கடிதம் எழுதியிருந்தேன்.

4. அன்று சபையில் செய்தி வேளையில் பாஸ்டர் ஒரு பெண் தன் திருமண வேளையில் தன் தலைமீது வெள்ளைநிற முக்காடு (white veil) கண்டிப்பாக அணியவேண்டும். ஸ்திரீயின் தலை முக்காடு (head covering) வேறு, இந்த வெள்ளை முக்காடு வேறு என்று போதித்தார். ஆனால் அதற்கு விளக்கம் எதுவும் கொடுக்கவில்லை. இரண்டாவதாக பெண்கள் சுடிதார் ஆடைகள் அணியக்கூடாது என்பது தனது சபை உபதேசங்களில் ஒன்றாக இருந்து வருகிறது எனவும் கூறினார். நான் ஏற்ற வேளையில் இந்த இரு உபதேசங்கள் குறித்து ஒரு செய்தித்தொகுப்பு எழுதுவேன். அதற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். மூன்றாவதாக திருமண முத்தம் தீர்க்கத்தரிசியின் செய்தியில் காணப்படும் ஒன்றாகும், ஆதலால் நாம் அதை கண்டிப்பாக கடைப்பிடிக்கவேண்டும் எனவும் உபதேசித்தார். பொதுவாக அன்று அவர் தனது பிரசங்கத்தில் தேவனுடைய வார்த்தையைக் கலப்பாய் பேசுவதையே என் காதுகளினால் கேட்டேன்.

5. இந்தத் திருமண முத்தத்திற்கு ஆதாரமாக முன்பு தீர்க்கத்தரிசி விவாக ஆராதனை மூன்று இடங்களில் நடத்தியதை தியானிக்கும்படி என்னிடம் கூறியிருந்தார். அன்று இந்த மூன்று விவாக ஆராதனை குறித்து எதுவும் பேசவில்லை. ஆனால் கே.ப.73-ல் பத்தி 809ஐ ஆங்கிலத்தில் வாசித்துக் காட்டினார். அது இவ்வாறாக உள்ளது:

Listen! To you, my dear sisters, I want you to look your best and be your best, that's what you ought to be. That's what you ought to be. And you ought to be as sweet and fresh and everything as you can when your husband comes, just the same as that was your sweet heart. And you ought to meet him at the door with just – with just a kiss as sweet to him as it was the day you kissed him at the altar to be your husband.

6. இந்த ஆங்கில பத்தியின் சாரம்சம் என்ன? சகோதரிகளே, நீங்கள் உங்களால் முடிந்தமட்டும் நன்றாக தோற்றமளிக்கவேண்டும். நீங்கள் இனியவளாகவும் (sweet) உங்கள் புருஷன் நினைவில் எப்பொழுதும் உள்ளவளாகவும் (fresh) இருந்து தன் புருஷன் வீட்டிற்கு வரும்போது அவனை வீட்டின் கதவு அண்டையில் சந்தித்து முத்தமிட்டு உங்கள் அன்பை வெளிப்படுத்தி அவனை வீட்டிற்குள் வரவேற்க வேண்டும். அந்த முத்தம் அவள் தன் திருமண நாளில் தன் கணவனை கணவனாக ஏற்றுக்கொண்டு அவனை முதல் முதலாக பலிபீடத்தில் (altar) முத்தமிட்டதுப்போல் இருக்கவேண்டும் என்று கூறுகிறார். இது குறித்து மேலும் நீங்கள் The second coming of the Lord என்ற செய்தியில் பத்தி 80-82 வாசிக்கலாம்.

7. முன்பு கூறிய மூன்று விவாக ஆராதனை சம்பவங்களுடன் இதையும் ஆதாரமாகக் கொண்டு பாஸ்டர் ஐசக் வசந்தக் குமார் திருமண நாளில் பலிபீடத்தில் ஆண் பெண் இருவரும் ஒருவரையொருவர் முத்தமிடவேண்டும் என ஒரு உபதேசத்தை சபைக்குள் கொண்டு வந்ததாகக் கூறினார். அதோடுமட்டுமல்ல, இந்த உபதேசத்திலிருந்து ஒருக்காலும் விலகப்போவதில்லை என மார்புத் தட்டியும் பேசினார்.

8. மேலும் இந்த திருமண முத்தத்திற்கு பாஸ்டர் சபையில் கொடுத்த விளக்கம் பின்வருமாறு: அதாவது காலகாலமாக இருந்துவந்த திருத்துவம் என்ற தவறான உபதேசத்தில் இருந்துவந்த மக்களை நமக்குக் கிடைத்த ஒரே தேவன், அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற வெளிப்பாட்டுக்குள் கொண்டுவர நாம் மிக்க பிரயாசப்பட வேண்டியதாயிருந்தது. இரண்டாவதாக கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் என்ற வெளிப்பாடு நமக்குக் கிடைத்தது. மீண்டுமாக நமது மக்களில் பிதா குமாரன் பரிசுத்த ஆவி நாமத்தினால் ஞானஸ்நானம் எடுத்தவர்களை சரியான ஞானஸ்நானத்திற்கு கொண்டு வர அதிக முயற்சிகள் எடுக்க வேண்டியதாயிருந்தது. மூன்றாவதாக ஸ்திரீயின் தலைமுக்காடு அவளது நீண்டத் தலைமயிர் என்ற வெளிப்பாடு நமக்குக் கிடைத்தது. ஆனால் பெண்கள் தங்கள் தலையை சேலை முந்தாணையால் முக்காடிட்டுக் கொண்டு அது தான் தங்கள் தலை முக்காடு என்ற உபதேசத்தில் பலஆயிரம் ஆண்டுகளாக மூழ்கிக்கிடந்தனர். அவர்களை நமக்குக் கிடைத்த வெளிப்பாட்டுக்குள் கொண்டுவர பல பாடுகளை நாம் சகிக்கவேண்டியதாயிருந்தது. அவ்வண்ணமாகவே இந்த திருமண முத்தம் என்ற வெளிப்பாட்டுக்குள் மக்களைக் கொண்டுவர மிக்க பிரயாசப்படவேண்டியது வரும் என்று கூறினார். அவைகளைச் சந்திக்க அவர் ஆயத்தமாக இருப்பதாகவும் ஆரவாரம் செய்தார்.

9. ஒரு பாவனை விசுவாசி குறித்து தீர்க்கத்தரிசி இவ்வாறு கூறுகிறார்: **யூதாஸ்சை போன்று கூடவேயிருந்துக்கொண்டு, வாய்ப்பு ஏற்படும்பொழுது அதோ அதுதான் காரியம் என்று பின்புரளி செய்து, இப்பொழுதோ அல்லது என்றோ ஒரு நாள் அவ்விதமாக அது சம்பவிக்கும் என்று எனக்குத் தெரியும்;** அந்தக் **காரியம் இது தான் என்று கூறுவான். அப்படிப்பட்டவன் ஒரு பாவனை விசுவாசியாயிருக்கிறான். (மூவகை விசுவாசிகள் பக்கம் 56, கடைசிப் பத்தி)** கவனித்தீர்களா? இன்று இதைத்தான் உங்கள் பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் செய்துக்கொண்டிருக்கிறார். நிச்சயமாக செய்தி இவரை ஒரு பாவனை விசுவாசியாகவே அடையாளம் காட்டுகிறது. இக்காலத்திற்குரிய செய்திக்கு இவர் தன் சொந்த அபிப்பிராயங்களையும், வியாக்கியானங்களையும் கொடுக்க ஆரம்பித்தப்பொழுது தவறுதலுக்குள்ளானார். இவருடைய அபிப்பிராயங்களும், வியாக்கியானங்களும் ஜனங்களை ஒரு குழப்பத்திற்குள்ளாக அழைத்துச் செல்லுகின்றன. இவர் இக்காலத்திற்குரிய செய்தியை உடையவராயிருந்தாலும் இவருடைய அபிப்பிராயங்கள் செய்தியுடன் கூட்டப்படுவதினால் இவர் தவறு செய்கிறதற்கு அது ஏது உண்டாயிற்று.

10. பிரசங்க முடிவில் தீர்க்கதரிசியின் ஒரு செய்திப் புத்தகத்தைக் கரங்களில் பிடித்துக்கொண்டு, நான் இது என்ன சொல்லுகிறதோ, இதில் என்னதெல்லாம் எழுதி வைக்கப்பட்டிருக்கிறதோ அவைகள் எல்லாவற்றையும் கடைப்பிடிப்பேன் என்று முழங்கினார். தீர்க்கதரிசி ஒரு அமெரிக்கன். திருமண முத்தம் அமெரிக்கா நாட்டுக் கலாச்சாரம் என்று கூறக்கூடாது. தீர்க்கத்தரிசி உலகத்திற்குச் சொந்தமானவர். திருமண முத்தம் அவரது திருமண ஆராதனையில் காணப்படுவதால் அது அனைத்து நாட்டினரும் கடைப்பிடிக்க வேண்டியதொன்றாகும். இந்தியா அதற்கு விதிவிலக்கு அல்ல என்றார். சபையில் அவருக்கு ஆதரவாக ஒரே ஆரவாரம். ஆனால் நான் மட்டும் சாத்தானுடைய கட்டுகளிலிருந்து இந்த மக்களை எப்படி விடுவிப்பது என்று சிந்தித்துக்கொண்டிருந்தேன்.

11. **மேலும் பிரசங்கவேளையில் தான் சபைக்கு ஆவிக்குரிய புருஷன், ஆதலால் யாவரும் தனக்கே கீழ்ப்படியவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.**

12. பிரியமானவர்களே இதுவரை திருமண முத்தம் குறித்து சுமார் 200 பேர்களுக்கு அதிகமானவர்களைக் கொண்ட ஒரு சபை பாஸ்டரது உபதேசத்தைக் கேட்டீர்கள். இப்பொழுது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் சுவிசேஷகனாக உள்ள எனது விளக்கத்தையும் கவனியுங்கள். வாருங்கள், தேவனுடைய வார்த்தையில் இக்காலத்திற்குரிய செய்தியின் வெளிச்சத்தில், வெளிச்சம் காண்போம். ஒரே தேவன் உண்டு, அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற தேவத்துவத்தைக் குறித்ததான வெளிப்பாடு, பாவமன்னிப்புக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் என்ற உபதேசம், ஸ்திரீயின் தலை முக்காடு அவளது நீண்ட தலைமயிர் என்ற போதனை யாவும் வேதவாக்கியங்களில் உள்ளது. அது அப்போஸ்தலர் தீர்க்கத்தரிசிகளுடைய உபதேசங்களாகவும் இருக்கிறது. ஆனால் இவைகள் அப்போஸ்தலர்களுடைய காலங்களுக்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக சிதைந்து, தேவத்துவம் கிறிஸ்துவுக்குள் சரீரப்பிரகாரமாக வாசமாயிருக்கிறது, அவர் ஒருவரே மெய்யான தேவன் என்பதற்கு எதிராக தேவத்துவத்தில் மூவர், ஆனால் மூவரும் ஒருவர் என்ற கோட்பாடு; ஞானஸ்நானத்தில் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திற்குரியவராகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை தள்ளிவிட்டு பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்ற பட்டப்பெயரினால் ஞானஸ்நானம்; ஒரு ஸ்திரீக்கு அவள் தலைமுக்காடு அவளது நீண்ட தலைமயிர் என்பது புறக்கணிக்கப்பட்டு அது அவளது சேலை முந்தாணி அல்லது ஒரு தொப்பி அல்லது ஒரு கைக்குட்டை என்ற தவறான உபதேசங்கள் தலைத்தூக்கி பல

ஆண்டுகளாக நடைமுறையிலிருந்து வந்தது. இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு சத்தியம் வெளியாக்கப்பட்டுள்ளது. தேவவசனம் பூரணமாய்த் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சபைக்காலத்தில் நாம் மூல உபதேசங்களுக்குத் திருப்பப்பட்டுள்ளோம். ஆனால் நம்முடைய மக்களோ பழைய தவறான பாரம்பரியத்திலும், உபதேசங்களிலும் மூழ்கி ஊறிப்போயிருந்தார்கள். அவர்களை உண்மையான உபதேசங்களுக்கு திருப்பிக்கொண்டுவர நாம் பிரயாசப்பட வேண்டியதாயிருந்தது.

13. இது பச்சைப்புழு விட்டதை வெட்டுக்கிளி தின்றது; வெட்டுக்கிளி விட்டதை பச்சைக்கிளி தின்றது; பச்சைக் கிளி விட்டதை முசுக்கட்டைப் பூச்சி தின்றது. ஆனாலும் நான் உங்களிடத்தில அனுப்பின என் பெரிய சேனையாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப்புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன் என்று கர்த்தர் யோவேல் தீர்க்கத்தரிசி மூலமாக கூறியது நிறைவேறிற்று. யோவேல் 1:4, 2:25. தேவனுடைய மந்தையிலுள்ள ஆடுகள், தேவனுடைய சத்தத்திற்கு, இக்காலத்திற்குரிய செய்திக்கு செவிக்கொடுத்து மந்தைக்குள் வந்து சேர்ந்து தேவனுடைய மந்தையிலுள்ள ஆடுகளாக தங்களை அடையாளம் காட்டிக்கொண்டிருக்கின்றன. சபை எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறது. ஆம், புத்தியுள்ள கன்னிகைகளும், புத்தியில்லாத கன்னிகைகளும் தங்களை ஆயத்தப்படுத்திக்கொணடிருக்கிறார்கள்.

14. இப்பொழுது கவனியுங்கள், திருமண முத்தம் தேவனுடைய வார்த்தையில் எங்கும் காணப்படாத ஒரு முத்தம். ஒரு உபதேசம். இது பல ஆயிரம் ஆண்டுகளாக மறைந்துக்கிடந்த ஒரு புதையலும் அல்ல. இது தீர்க்கத்தரிசியின் செய்தியில் வெளியரங்கமாக்கப்பட்ட இரகசியமும் அல்ல. சபைக்கு கிடைத்த ஒரு வெளிப்பாடும் அல்ல. இது தீர்க்கத்தரிசியின் நாமத்தை வீணிலே வழங்கும் பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாரின் ஒரு புது உபதேசம். இக்காலத்திற்குரிய தீர்க்கத்தரிசியும், ஏழாம் சபைக்காலத் தூதனுமாகிய சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் திருமண முத்தத்தை ஒரு உபதேசமாக தேவனுடைய சபைக்குள் கொண்டு வரவில்லை. திருமண முத்தத்தை பல ஆயிரம் ஆண்டுகளாக மறைக்கப்பட்டிருந்த தேவத்துவம், ஞானஸ்நானம், ஸ்தீரியின் தலைமுக்காடு இவைகளுடன் ஒப்பிடும் ஞானம் பரத்திலிருந்து இறங்கி வந்தது அல்ல. அது பேய்த்தனத்துக்கடுத்ததேயன்றி மற்றப்படி அல்ல.

15. தீர்க்கத்தரிசி நடத்திய திருமண ஆராதனையில் காணப்படும் திருமண முத்தம் அவரது நாட்டுக் கலாச்சாரம். இந்த திருமண முத்தத்தை அமெரிக்கா நாட்டினர் யாவரும் கடைப்பிடிப்பார்கள். ஆக அவரது நாட்டு கலாச்சாரத்தின்படி, பாரம்பரியத்தின்படி திருமண ஆராதனையில் மணமகன் மணமகள் ஒருவரையொருவர் முத்தமிட்டார்கள். திருமணம் தேவாலயத்தில் நடைபெறும் ஒன்றாகும். ஆதலால் அவர்கள் தேவாலயத்தில் பலிபீடத்தில் முத்தமிட்டார்கள். தேவாலயத்தில், திருமண ஆராதனையில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் கணவன் மனைவி என்று திருமண ஆராதனை நடத்துகிறவரால் உறுதிச் செய்யப்பட்டவுடன் அவர்கள், நாட்டு கலாச்சாரத்தின்படி ஒருவரையொருவர் முத்தமிடுவார்கள். ஆக திருமண முத்தம் தீர்க்கத்தரிசியின் நாட்டு கலாச்சாரத்தின்படி அவர் நடத்தி வைத்த திருமணத்தில் மட்டும் அல்ல, அவர் நாட்டு அனைத்து திருமண வைபவங்களிலும் நடக்கும் ஒன்றாகும். இந்தக் காட்சியை நமது நாட்டுப்பண்பாடுகளுடன் கொண்டு வந்து இணைப்பது, அதுவும் தேவனுடைய சபையில் ஒரு உபதேசமாகக் கொண்டு வந்து நுழைப்பது நூறு சதவீதம் மாம்சத்திற்கேற்ற ஞானம். சாத்தானுடைய ஒரு கிரியை. ஆக பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாரின் உதாரணங்கள் யாவும் அர்த்தமற்றது. திருமண முத்தம் தேவையற்ற ஒரு உபதேசம். சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆண்டு வரும் இவரது உபதேசத்தை நிராகரியுங்கள். **நமக்கு தேவையானது ஒன்று. அது தேவனுடைய வார்த்தையில் காணப்படும், அப்போஸ்தலர் தீர்க்கத்தரிசிகளின் உபதேசங்களில் காணப்படும் பரிசுத்த முத்தம் ஆகும்.** இதை தேவனுடைய சபையில் கடைப்பிடியுங்கள் என உங்கள் அனைவரையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் கேட்டுக் கொள்ளுகிறேன்.

16. திருமணச் சடங்குகள், ஆராதனை முறைமைகள் சபைக்குச் சபை, ஊருக்கு ஊர், நாட்டுக்கு நாடு வித்தியாசப்பட்டது. தீர்க்கத்தரிசியின் திருமண ஆராதனை முறைமை போன்று நாமும் ஆராதனை நடத்துவதில் தவறு எதுவும் கிடையாது. ஆனால் அவரது ஆராதனை முறைமையில் அவரது நாட்டு கலாச்சாரமும் காணப்படுவதால் அந்த நாட்டு கலாச்சாரத்தை நமது நாட்டு மக்கள் மேல் திணிக்கக்கூடாது. அது ஒரு நாட்டு கலாச்சாரத்தை மற்றொரு நாட்டு மக்கள் மீது திணிப்பதாகும். தேவனுடைய சபையில் உபதேசமாக எந்த ஒரு நாட்டு கலாச்சாரத்திற்கும் இடமில்லை.

17. அடுத்து பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் கே.ப 73-ல் பத்தி 809ஐ சுட்டிக்காட்டி, கணவன் மனைவி ஒருவரையொருவர் தினசரி வாசற்படியில் முத்தமிடுவது அன்று அவர்கள் பலிபீடத்தில் தங்கள் திருமண நாளன்று முத்தமிட்டதுப் போல் இருக்கவேண்டும் என்று தீர்க்கத்தரிசி கூறுகிறார். ஆதலால் திருமணத்தில் பலிபீடத்தில் (altar) மணமகன் மணமகள் நிச்சயம் முத்தமிடவேண்டும் என்கிறார். இப்பொழுது நாம் இங்கு கவனிக்கவேண்டியது கே.ப 73 எதைக் குறிக்கிறது? தூதர்களினிமித்தம் ஏன் ஸ்தீரி நீண்ட தலைமயிர் உடையவளாக இருக்கவேண்டும் என்பது குறித்து 1கொரி.11:10ஐ பற்றியதாகும். இந்தக் கேள்வி திருமண முத்தத்தைக் குறித்து அல்ல. அல்லது அதை ஒரு உபதேசமாக தேவனுடைய சபைக்குள் கொண்டுவருவது பற்றி அல்ல. இங்கு பத்தி 809-ல் தீர்க்கத்தரிசி தன் நாட்டு பழக்கவழக்கத்திற்கேற்றாற்போல் தன் நாட்டு மக்களுக்கு சில அறிவுரைகள், புத்திமதிகள் கூறுகிறார். அவ்வளவு தான்.
அ) திருமணத்தில் சென்னை சபையில் மணமகன் மணமகள் ஒருவரையொருவர் முத்தமிடுகிறார்கள். இப்பொழுது அவர்கள் சபையில் திருமணமான பெண்கள் தங்கள் கணவன் வெளியிலிருந்து வரும்பொழுது கதவண்டையில் நின்றுக் கொண்டு அவர்களை முத்தமிட்டு வரவேற்கிறார்களா? நிச்சயமாக சென்னை சபை பெண்கள் இதை நூறு சதவீதம் கடைப்பிடிக்கவில்லை என என்னால் உறுதியாகக் கூறமுடியும், அப்படியானால் திருமண முத்தத்திற்கு மட்டும் ஏன் இத்தனை முக்கியத்துவம்? சகோ. பிரன்காம் நடத்தும் திருமண ஆராதனையில் காணப்படும் திருமண முத்தம் நமது சபையில் காணப்படவேண்டுமானால், சகோ. பிரன்காம் செய்தியில் (கே.ப 73) காணப்படும் இந்த வாசற்படி முத்தம் சென்னை சபையில் அனைத்து வீடுகளிலும் காணப்பட வேண்டும் அல்லவா? இவர்கள் இதை கடைப்பிடிக்காவிட்டால் ஒன்றைப் பற்றிக்கொண்டு மற்றொன்றை நிராகரிப்பதினால் நூறு சதவீதம் மாய்மாலக்காரர்களே! சென்னை சபையாரே உங்கள் திருமண ஆராதனையில் திருமண முத்தம் காணப்படவேண்டுமானால், உங்கள் வீட்டில் வாசற்படி முத்தமும் காணப்படவேண்டும்.

அதையும் செய்யவேண்டும், இதையும் செய்யவேண்டும். ஒன்றை மட்டும் கடைப்பிடித்து மற்றொன்றை நிராகரிக்கக்கூடாது. இதற்காக நீங்கள் யாவரும் குடும்பமாக அமெரிக்கா சென்றுவிடுவது நல்லது.

ஆ) அடுத்து ஏழாம் சபைக் காலத்தூதன் தம்முடைய செய்தியில் எங்கும் சென்னை சபை பெண்கள் அணியும் சேலைப்பற்றி எதுவும் கூறவில்லை. மாறாக அவர், அவரது நாட்டு மக்கள் அணியும் பாவாடை (skirt) குறித்தே கூறுகிறார். ஆக சென்னை சபை பெண்கள் அணியும் சேலை அவரது செய்தியில் எங்கும் இடம்பெறவில்லை. மாறாக அவர் நாட்டு பெண்கள் அணியும் பாவாடை மட்டுமே இடம்பெற்றுள்ளது. ஆதலால் இனி சென்னை சபை பெண்கள் தங்கள் சேலைகளை கழைந்துப் போட்டுவிட்டு, பாவாடை மட்டுமே அணியவேண்டும். இவர்கள் முற்றிலுமாக தீர்க்கத்தரிசி என்ன செய்கிறாரோ, சொல்லுகிறாரோ அதையே கடைப்பிடிப்பவர்கள். ஆதலால் சேலையை மறந்துவிட்டு பாவாடையே அணிந்துக்கொள்ளவேண்டும். பாவாடை அணியாவிட்டால் சென்னை சபையார் இந்த விஷயத்திலும் மாய்மாலக்காரர்களே. பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் இது வரை தனக்கு பிடித்ததான ஒன்றை, திருமண முத்தத்தை பற்றிக்கொண்டு, மற்றொன்றை அதாவது பாவாடையை நிராகரித்து வருவதால் அவரும் ஒரு மாய்மாலக்காரரே.

18. பாருங்கள், தீர்க்கத்தரிசியும் நீண்ட பாவாடை அணிந்தவர்களையே திரைக்கு அப்பால் (beyond the curtain) கண்டதாக கூறுகிறார் (புறக்கணிக்கப்பட்ட ராஜா, பக்கம் 33, பத்தி 2).

19. இது குறித்து மேலும் சிறந்த வேலைப்பாடு என்ற செய்தியில் பத்தி 187ஐ தியானியுங்கள். அங்கு தீர்க்கதரிசி கண்ட மணவாட்டி முன்காட்சியில் பெண்கள் ஒவ்வொருவரும் வித்தியாசமான ஆடைகள் அணிந்திருந்தார்கள் எனக் கூறுகிறார் இது எதைக் குறிக்கிறது? அவர்கள் ஒவ்வொருவரும் வித்தியாசமான நாட்டைச் சார்ந்தவர்கள், ஆதலால், வித்தியாசமான ஆடைகள் அணிந்திருந்தனர் என்பதைக் காட்டுகிறது. ஏன் அனைவரும் பாவாடை மட்டுமே அணிந்திருக்கவில்லை? செய்தியில் பாவாடை அணிந்திருப்பவர்களை மாத்திரமே சகோ.பிரன்காம் கூறுகிறார். சென்னை சபையாரை சற்று சிந்தியுங்கள். அவர்கள், அவர்கள் நாட்டுக் கலாச்சாரத்தின்படி வெவ்வேறு விதமான ஆடைகள் அணிந்திருந்தனர். பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் அவர்களே உங்கள் உபதேசம் முற்றிலும் தவறானது என்பதை நிதானமாக சிந்தித்துப் பாருங்கள். தவறை திருத்திக்கொள்ளுங்கள். அதுதான் பரிசுத்த ஆவி. கௌரவம் பார்க்காதீர்கள்.

20. பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் போதனையின்படி தீர்க்கத்தரிசி ஒரு அமெரிக்கர் அல்ல, அவர் அனைத்து நாட்டிற்கும் பொதுவானவர், ஆதலால் அவர் கடைப்பிடிக்கும் அனைத்துக் காரியங்களையும் எல்லா நாட்டினரும் கடைப்பிடிக்க வேண்டும் என்பது எவ்வளவு பெரிய தவறாக உபதேசம் என்பதை சிந்தித்துப் பாருங்கள். பாவாடை அமெரிக்கா நாட்டுப் பெண்கள் ஆடை. ஆதலால் அவர் அதைக் குறித்தே தனது செய்திகளில் பேசி வருகிறார். ஆனால் மணவாட்டி முன்காட்சியில் எல்லா நாட்டு மக்களும் இருந்தார்கள். ஆதலால் அவர்கள் வித்தியாசமான ஆடைகள் அணிந்திருந்தனர். பாருங்கள், ஆடைகள் நாட்டுக்கு நாடு வித்தியாசப்படுகிறது. தேவனுடைய வார்த்தையில் எது உபதேசமாக எழுதப்பட்டுள்ளதோ, கொடுக்கப்பட்டுள்ளதோ அது பூமியில் உள்ள அனைத்து நாட்டு மக்களுக்கும் பொதுவானது. பாருங்கள் ஆண்கள் ஆடைகளை பெண்கள் அணியக்கூடாது. பெண்கள் அணியும் ஆடைகளை ஆண்கள் அணியக்கூடாது. தகுதியான ஆடைகளை அணியவேண்டும். இது தான் பொதுவான உபதேசம். ஆடைகளில் நாம் ஒரேவிதமான ஆடைகளை எல்லாத் தேசத்தாரும் அணியவேண்டும் என கட்டாயப்படுத்த முடியாது. தீர்க்கத்தரிசி பாவாடைக் குறித்துத் தான் பேசுகிறார். ஆதலால் நமது பெண்கள் அனைவரும் பாவாடைதான் அணியவேண்டும் எனக் கூறக்கூடாது.

21. ஆக தீர்க்கத்தரிசியின் திருமண ஆராதனையில் உள்ள திருமண முத்தத்தைக் கடைபிடிக்கும் பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் இனி செய்தியில் காணப்படும் பாவாடையை மட்டுமே அணியவேண்டும் என அவரது சபை பெண்களைக் கட்டாயப்படுத்தவேண்டும். மேலும் இவரது பேச்சைப் பாருங்கள் திருமண முத்தம் தனது சபைக்கு மட்டுமே என்கிறார். திருமண முத்தம் இவரது சபைக்கு மட்டும் என்றால், இவரது சபை தேவனுடைய சபை இல்லையா? நாம் முன்பு தியானித்தப்படி தேவனுடைய சபையில் ஏழாம் சபைக் காலத் தூதன் தன் சுயமாக எந்தவிதமான போதனையையும் கொண்டு வரமுடியாது. அதற்கு தேவனுடைய வார்த்தையில் ஆதாரம் இருக்கவேண்டும். பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார், பிரன்காம் பிரன்காம் எனக் கூறிக்கொண்டே அவரது ஆடைகளுக்குள் மறைந்துக் கொண்டு வேறுவிதமாக செயல்பட்டு வருகிறார். ஆதலால் அவரது உபதேசங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். சென்னை சபை பிரன்காம் கிறிஸ்து ஆவியினால் வழிநடத்தப்படுகிறது.

22. அடுத்து பெண்கள் ஓட்டுப் போடுவதை தீர்க்கத்தரிசி ஆதரிக்கவில்லை. **அவர்கள் பெண்கள் ஓட்டுப் போட அனுமதிக்கின்றனர். அப்படி அவர்கள் செய்யும்போது, அது இந்த நாட்டுக்கு நேரிடும் மிகப்பெரிய அவமானமாயிருக்கும் என்கிறார்.** நான் மேலும், அதன் பலனை அவர்கள் என்றாவது ஒரு நாள் அனுபவித்தாக வேண்டும் என்றேன். சென்ற தேர்தலின் போது அப்படி நடந்தது. இந்த ஜனாதிபதியை தேர்ந்தெடுத்தது பெண்களே. (யேசபேல் மார்க்கம், பத்தி 66) பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் தனது சபைப் பெண்கள் இனி தேர்தலில் ஓட்டுப் போடக்கூடாது என்று உபதேசிப்பாரா? ஏனென்றால் தீர்க்கத்தரிசி பெண்கள் ஓட்டுப் போடுவதை ஆதரிக்கவில்லையே! இவர் தீர்க்கத்தரிசி கூறுவதை அப்படியே கடைப்பிடிக்கும் பக்தன் அல்லவா?

23. பலிபீடத்தில் நின்றுக்கொண்டு கைகளில் இக்காலத்திற்குரிய செய்திப் புத்தகங்களை வைத்துக் கொண்டு, கரங்களை உயர்த்தி அசைத்து நாங்கள் இதில் கூறப்பட்டுள்ளது, காணப்படுவது அனைத்தையும் கடைப்பிடிப்போம் என்று பாஸ்டர் கூற சபையார் அனைவரும் ஆர்ப்பரிக்கிறார்களே? திருமண முத்தத்திற்கு கே.ப.73, பத்தி 809ஐ சுட்டிக் காட்டினார்கள். அதே வேளையில் அதே கே.ப-யில் பத்தி 771, 777ஐ இவர்கள் கண்கள் ஏன் காணத் தவறியது? சாத்தான் இந்த இரு பத்திக்கும் இவர்கள் கண்களை எப்படி குருடாக்கினான்? சென்னை சபையாரே, வாருங்கள் உங்கள் கண்களுக்கு கலிங்கம் போட்டுக்கொள்ளுங்கள்.

பத்தி 771: I don't say all women shouldn't some time have to work; may be they got a sick husband or something, and they have to work. But if they don't have to, they shouldn't do it. Their place is at home, their little castle, that's exactly where they should be .

பத்தி 777: Put the women in the kitchen where she belongs, then everything will be alright. But you put her out there in public work, she's gone.

24. பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் அவர்களே நீங்கள் உபதேசம் பண்ணும் கே.ப.73-ன் உபதேசம் மேற்கண்டப்படி இருக்க, நீங்கள் எங்கள் அருமை சகோதரியாகிய உங்கள் மனைவியை வேலைக்கு அனுப்பலாமா? இது உங்களுக்கு ஒரு வெட்கமாக இல்லையா? கேட்பதற்கு யாரும் இல்லை என்ற எண்ணமா? நான் உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் இடைபடுகிறேன் என்று நினைக்காதீர்கள். ஒருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையில் இடைபட, தவறுகள் கண்டுக்கொள்ள எனக்கு உரிமை கிடையாது. ஆனால் இங்கு நீங்கள் பாஸ்டர், சகோதரியாகிய உங்கள் மனைவி தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக, இக்காலத்திற்குரிய செய்திக்கு விரோதமாக பொது இடங்களில் பணிசெய்கிறார்கள். இது ஊருக்குத்தான் உபதேசம் என்ற கதையாக இருக்கிறது. ஊருக்கு உபதேசம் செய்கிற நீங்கள், இந்த உபதேசத்தை உங்கள் குடும்பத்தில் கடைப்பிடிக்காதது ஏன்? மாய்மாலம் வேண்டாம் சகோதரரே! சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகை செய்யாதீர்கள்.

**25. என்ன நேர்ந்தது? விவாகத்தின் போது .. வேதத்தில் வேறொரு பாகம் உள்ளது. விவாகத்தின் போது கீழ்ப்படிவேன் என்னும் பொருத்தனை செய்யப்படுகின்றது. வீட்டில் தரித்திருக்கிறவர்களும், கற்புள்ளவர்களும், நற்காரியங்களைச் செய்கிறவர்களும் (தீத் 2:5). அவள் உங்களைப் பார்த்து புன்முறுவல் செய்துவிட்டு, வேறொருவரின் அலுவலகத்திற்கு சென்று வேலை பார்த்துவிட்டு திரும்பி வந்து, என் கணவனே .. என்றால்! ஓ, எனக்கு அதில் நம்பிக்கை இல்லை. (அவருடைய வருகையின் அடையாளமாகப் பிரகாசிக்கும் சிகப்பு விளக்கு, பத்தி 150, 23.6.1963)**

26. சகோதரியாகிய உங்கள் மனைவி வேலை செய்வதால் பெண்கள் வெளியே பொது இடங்களில் சென்று பணி செய்யக்கூடாது, அவர்கள் சாராளைப் போன்று குடிசைக்குள் அமர்ந்திருக்கும் வேண்டும் என்று உங்களால் உபதேசம் பண்ணமுடியவில்லை. பாருங்கள் உங்கள் உபதேசங்களிலே மாய்மாலம் காணப்படுகிறது. நீங்கள் உத்தமமும் உண்மையுமான ஊழியக்காரன் என்றால் முதலில் சகோதரியாகிய உங்கள் மனைவி வேலைப் பார்ப்பதை உடனே நிறுத்துங்கள், அடுத்து உங்கள் சபையில் பணிசெய்யும் அனைத்து சகோதரிகளாகிய நம்முடைய சகோதரர்களுடைய மனைவியை அவர்கள் பணியிலிருந்து விலக உபதேசம் செய்யுங்கள். அவர்கள் யாவரும் தங்கள் குடிசைக்குள் இருந்து, ஒரு குடும்பப் பெண்ணாக நிலைத்திருக்கட்டும். தேவனுடைய சபையில் செய்தியில் உள்ள போதனைகளை உபதேசங்களாக போதிக்காமல், தேவையற்ற எதைஎதையோ உபதேசங்களாகப் போதித்து மாய்மாலம் பண்ணாதிருங்கள்.

27. பாஸ்டர் சகோதரரே, நீங்கள் உங்களை குருடர்களுக்கு வழிக்காட்டியாகவும் அந்தக்காரத்திலுள்ள வர்களுக்கு வெளிச்சமாகவும், பேதைகளுக்கு போதகனாகவும், குழந்தைகளுக்கு உபாத்தியாயனாகவும், இக்காலத்திற்குரிய செய்தியின் அறிவையும், சத்தியத்தையும் காட்டிய சட்டமுடையவனாகவும் எண்ணுகிறீர்கள். இப்படியிருக்க மற்றவர்களுக்குப் போதிக்கிற நீங்கள் உங்களுக்குத் தானே போதியாமல் இருக்கிறதென்ன? சகோதரியாகிய உங்கள் மனைவி பொது இடங்களில் வேலை செய்யலாமா? இக்காலத்திற்குரிய செய்திக்கு மாறாக, தேவனுடைய வார்த்தைக்கு முரணாக சகோதரியாகிய உங்கள் மனைவியை வேலைக்கு அனுப்பி நீங்கள் தேவனை, இக்காலத்திற்குரிய செய்தியை கனவீனம் பண்ணலாமா? தேவனுடைய நாமம், இக்காலத்திற்குரிய செய்தி உங்கள் மூலமாய் தூஷிக்கப்படுகிறதே!

28. மேலும் **இன்னும் ஒரு விசைக் கர்த்தாவே என்ற செய்தியில் பத்தி 114 என்ன கூறுகிறது என்று கவனியுங்கள். மிகுந்த ஆசைவூட்டும் ஒரு எழுப்புதல் இந்தப் பெண்களை பொது ஜன வேலைகளிலிருந்தும், தெருவில் நடக்கும் காவல்காரா் வேலையிலிருந்தும் எடுத்துப்போடும் என்று நினைக்கிறீர்களா? அவள் சமயலறையில் இருக்கவேண்டியவள். நீங்கள் மறுபடியும் அவளை அந்த இடத்திற்கு கொண்டுவர முடியும் என்று நினைக்கிறீர்களா? இல்லை, ஐயா, அவள் இரட்சிக்கப்பட்டாலொழிய அப்படிச் செய்யமாட்டாள். அவள் இரட்சிக்கப்பட்டால், அப்படிச்செய்வாள். அப்பொழுது நீங்கள் அவளிடம் அதைக் குறித்து சொல்லவேண்டிய அவசியமே இராது. அவள் தனது இடத்தை அறிந்து கொள்வாள். பரிசுத்த ஆவியானவா் என்னை வழிநடத்துகிறார் என்று நீ கூறுகிறாயா? வார்த்தைக்கு முரணான ஒன்றுக்கா? அதை பரிசுத்த ஆவி என்று அழைக்காதே.** பிரியமான சென்னை சபை சகோதரர்களே நன்கு கவனியுங்கள். ஒரு பெண் இரட்சிக்கப்பட்டவளாயிருப்பாளாகில் அவள் தன் இருப்பிடமாகிய சமையல் அறையில் இருப்பாள். பொதுஜன வேலையில் இருக்கமாட்டாள். பொதுஜன வேலையில் இருக்கும் நமது சகோதரியாகிய பாஸ்டரின் மனைவி அப்படியானால் செய்தியின்படி இரட்சிக்கப்பட்டவர்களா? அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களா? சகோதரி, பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாரின் சரீரத்தின் ஒரு பாகமாக இருப்பதினால், சகோதரியிடம் பரிசுத்த ஆவி இல்லையென்றால் பாஸ்டர் சகோதரர் பரிசுத்த ஆவியை பெறவில்லை. ஏனென்றால் கணவன் மனைவி ஒரே சரீரமாயிருக்கிறார்கள். கிறிஸ்துவும் அவரது மணவாட்டியும் ஒரே சரீரம். கவனியுங்கள், இப்பொழுது பாஸ்டர் பரிசுத்த ஆவியை பெற்றவரா என்று சீர்தூக்கி பார்க்கவேண்டிய நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள். ஆதலால் பிரியமானவர்களே நீங்கள் விசுவாசிக்கும், உபதேசிக்கும் செய்தியே உங்களை நியாயம் தீர்க்கிறது என்பதை மறந்துவிடாதீர்கள்.

29. அடுத்து சகோதரியாகிய உங்கள் மனைவி பொது இடத்தில் வேலை செய்துவிட்டு தினசரி மாலையில் களைப்போடு வீடு திரும்பும்போது நீங்கள் வாசற்படியில் நின்றுக்கொண்டு அவர்களை அணைத்து முத்தமிட்டு வரவேற்று உங்கள் அன்பை காட்டுகிறீர்களா? உங்கள் உபதேசங்களை உங்கள் செயலில் காட்டுகிறீர்களா? கிரியையற்ற உங்கள் உபதேசம் செத்ததுதானே!

30. அடுத்து உங்களை நீங்களே நிதானித்துப் பார்க்க மற்றொரு காரியம். அதுக் குறித்து செய்தி என்னச் சொல்லுகிறது என்பதை கவனமாக வாசித்து தியானியுங்கள். Pastor has a single ministry கே.ப 221, பத்தி 36. A pastor is not an Evangelist. (Taking sides with Jesus, para 64) தேவனுடைய வார்த்தையின்படி இக்காலத்திற்குரிய செய்தியின்படி பாஸ்டருக்கு ஐந்து வகை ஊழியங்களில் ஒரு ஊழியம் மட்டுமே. பாஸ்டர் ஒரு சுவிசேஷகன் அல்ல. நீங்கள் உபதேசிக்கும் கடைப்பிடிக்கும் செய்தி இவ்வாறு கூற, கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த மந்தையைப் போஷித்து, பராமரித்து வழிநடத்துவதை விட்டுவிட்டு, இரட்சிப்பின் மேய்ச்சலையடையச் செய்வதை விட்டுவிட்டு உங்கள் மனம்போனப்போக்கில் ஊர்ஊராக சுற்றுவது ஏன்? ஊர்ஊராக சுற்றுவதுதான்

ஒரு மந்தை மேய்ப்பனுக்குரிய பணியா? உங்களது ஊழியம் நீங்கள் பாஸ்டராக உள்ள சபைக்கு மட்டும்தானே? மாறாக ஊரில் உள்ள சபைகளுக்கு அல்ல என்பதை அறிவீர்களா? ஒரு நாள் கோயம்புத்தூர் போகிறேன், மறுநாள் விஜயவாடா போகிறேன், மூன்றாவது நாள் பெங்களூர் போகிறேன், இவ்வாறாக வாரத்தில் ஆறு நாட்கள் ஊர் சுற்றுவேன், ஏழாவது நாள் சபைக்கு வந்துவிடுவேன். இப்படியாக ஊர்ஊராக சுற்றித் திரிவதுதான் பாஸ்டர் ஊழியமா? சற்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் உங்கள் ஊழிய அழைப்பை இன்னும் அறியவில்லை. உங்களைச் சேர்ந்தவர்களும் உங்களது ஊழிய அழைப்பை அறிந்துக்கொள்ளவில்லை, புரிந்துக் கொள்ளவில்லை. சென்னை சபையில் எங்கும் எதிலும் அந்தகாரம் தான்.

31. இங்கு தேவனுடைய ஒழுங்கு என்ன? ஒருவன் அனுப்பப்படுகிறான். அவன் அப்போஸ்தலன் அல்லது சுவிசேஷகன். அவன் பிரசங்கிக்கிறான். ஜனங்கள் பிரசங்கத்தைக் கேட்கிறார்கள். கேட்டவர்களில் நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள் விசுவாசிக்கிறார்கள். அப்.13:48 இருதயத்தில் குத்தப்படுகிறார்கள். அப்.2:37 கர்த்தருடைய நாமத்தை தொழுதுக்கொள்ளுகிறார்கள். அப்.22:16 ஞானஸ்நானம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் பெற்றுக்கொள்ளுகிறார்கள். அப்.2:38 தங்கள் பாவங்கள் போக்கக் கழுவப்படுகிறார்கள். அப்.22:16 கர்த்தர் அனுதினமும் அவர்களை சபையில் சேர்த்துக்கொண்டு வருகிறார். அப்.2:47 இதுக் குறித்து நீங்கள் மேலும் தியானிக்கவிரும்பினால் வாசியுங்கள் ரோ.10:13-17.

32. பாருங்கள் சகோதரரே, உங்கள் குடும்ப காரியம் தேவனுடைய வார்த்தையின்படி அல்ல. இதற்கு ஆதாரமாக தியானியுங்கள ஆதி3:16-19, சங் 68:13, தீத் 2:5. அடுத்து இக்காலத்திற்குரிய செய்தியின்படியும் அல்ல. கே.ப.73, பத்தி 771, 777.

**33.** **ஒரு பிரசங்கி அங்கு எழுந்து நின்று வார்த்தையை ஒரு பிரதான தூதனைப் போல் பிரசங்கித்து, பாருங்கள், வேதத்திலுள்ள இரகசியங்களை அறிந்து, ஒரு நல்ல மேய்ப்பனாக விளங்கி, ஜனங்களைச் சந்தித்து மற்ற காரியங்களைச் செய்திருந்தாலும், அவர் இழக்கப்பட்டவராயிருக்கக்கூடும். பாருங்கள்? அவருடைய கனி ஒவ்வொரு முறையும் அதைத் தெரியப்படுத்தும், - சகோதரனே. பாருங்கள்? அவர் எவ்வளவு நல்லவராயிருந்தாலும் அவர் என்னவாயிருந்தாலும், அவருடைய வாழ்க்கையில் அவர் பரிசுத்த ஆவியை கொண்டிருக்கவேண்டும். (கே.ப.112, பத்தி 213). ஆம் ஐயா, பரிசுத்த ஆவி கட்டுப்படுத்துகிறது. ஆம் ஐயா, அதற்கு உங்கள் மீது கட்டுப்பாடு உண்டு. உங்களுக்கும் அதன் மீது கட்டுப்பாடு உண்டு. நீங்கள் வேதத்திற்கு முரணாக நடந்துக்கொள்ளும்படி அது ஒருக்காலும் செய்யாது. அது, ஆவி அயோக்கியமானதைச் செய்யாது. அது உண்மை கே.ப 113, பத்தி 219. உங்களுக்கு பரிசுத்த ஆவி உண்டென்றுக்கூறி நீங்கள் வார்த்தையை பின்பற்றாமற்போனால், உங்களுக்குள் இருப்பது வேறொரு ஆவி. தேவனுடைய ஆவி அவருடைய வார்த்தையின் மேல் தங்கியுள்ளது.**

34. **பாருங்கள், இக்காலத்திற்குரிய செய்தியின் அடிப்படையில் உள்ள சபைகளில் அநேக போலிகளும், போலியான செயலகளும் காணப்படுகின்றன. நான் அங்கு செல்வதினால், அவர்கள் நடந்துக் கொள்வதுப்போன்று நானும் நடந்துக் கொள்ள வேண்டுமென்றால் அது எனக்குத் தேவையில்லை. சபைகள் என்னை வெறுக்கிறது, ஏன்? அவைகள் தேவனுடைய, இக்காலத்திற்குரிய செய்தியை மறுதலிக்கின்றன.**

35. மேலும் சகோதரரே, ஒரு பாஸ்டர் தேவனுடைய வார்த்தையை விட்டு எக்காரணம் கொண்டும் விலகக்கூடாது. அதிலே நிலைத்திருக்க வேண்டும். A pastor should never leave the Word, but stay with the Word. (Revelation, book of symbols, para 58). பாஸ்டர் தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருப்பதோடு மட்டும் அல்ல, அதற்கு முற்றிலுமாக கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். The pastor obey God. (A total deliverance, para 78) பாருங்கள் செய்தி இப்படியிருக்க தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாத, இக்காலத்தின் செய்திக்கு கீழ்ப்படியாத நீங்கள் உங்களை எப்படி தேவனுடைய சபைக்கு ஆவிக்குரிய புருஷனாக அழைக்கலாம்? அவ்வாறு நீங்கள் உங்களை அழைப்பது தேவதூஷணம் இல்லையா? ஒரு அபத்தமான பேச்சு இல்லையா? அவ்வாறு அழைப்பது உங்களுக்கே வெட்கமாகத் தோன்றவில்லையா? நீங்கள் உங்களை தேவனுடைய சபைக்கு ஆவிக்குரிய புருஷன் என்று சொல்ல என்ன தகுதியிருக்கிறது? நீங்கள் உங்களை தேவனுடைய சபைக்கு ஆவிக்குரிய புருஷன் என்று கூறிக்கொண்டு ஆவிக்குரிய விபசாரம் செய்கிறீர்கள். வலது கைக்கும், இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத ஒரு கூட்டம் ஜனங்களை ஏமாற்றி வருகிறீர்கள்.

36. பாருங்கள், அன்று அவர் அவர்களுடைய போதகர்களை விரியன்பாம்புக்குட்டிகளே என்று அழைத்தார். வெள்ளையடிக்கப்பட்டச் சுவர்களே நீங்கள் கல்லறை தவிர வேறொன்றும் இல்லை என்றார். பிரியமான சகோதரரே அவர் சொன்ன காரியங்களில் ஒன்றும் உங்களுக்கு நேரிடாதபடிக்கு கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கள். நான் இன்னும் எழுத அநேக காரியங்கள் உண்டு. ஆனால் எடுத்துக் காட்டுக்காக இந்த ஓரிரு சம்பவங்கள் மட்டும் போதும் என நினைக்கின்றேன்.

37. இதுவரை திருமண முத்தம் செய்தித்தொகுப்பிற்கு எதிரான வழக்கு விசாரணைக்கு முன்னுரையாக சென்னை சபையில் 2004, ஆகஸ்ட், 22-ம் தேதி ஞாயிறு ஆராதனையின் பிரசங்கத்தில் பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் உபதேசங்களையும், அதற்கடுத்தக் காரியங்களையும் தியானித்தோம். இனி அன்று நடந்த வழக்கு விசாரணைக்கு நியாய சங்கம் உட்கார்ந்த விவரத்தை எழுத விரும்புகிறேன். திருமணம் முத்தம் குறித்ததான எனது செய்தித்தொகுப்பு விநியோகம் செய்யப்படாத நிலையில், என்னுடைய பல திருத்தங்களுக்காக அது இருந்தது. இந்த செய்தித்தொகுப்பை திருவைகுண்டத்தில் கம்ப்யூட்டர் டைப் செய்தேன். திருத்தங்களுக்காக நகல் எடுத்தேன். மீண்டும் அதைத் திருவைகுண்டத்தில் தொடர்ந்து டைப் பண்ணமுடியாத சூழ்நிலையை சாத்தான் உருவாக்கிச் சூழ்ச்சி செய்தான். ஆனாலும் தடைகளை மேற்கொண்டேன். டைப் செய்த சகோதரி, ஒரு கிறிஸ்தவப் பெண்ணாக இருந்தும் என்னுடன் ஒத்துழைக்க மறுத்துவிட்டாள். கம்ப்யூட்டர் தொழிற்கூடத்தின் உரிமையாளர் ஒரு அவிசுவாசி, ஒரு விக்கிரகாராதனைக்காரர். ஆனாலும் அவர் எனக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்தார். ஆனால் அந்த கிறிஸ்தவ பெண் ஒத்துழைப்புக் கொடுக்க மறுத்துவிட்டாள். ஆதலால் டைப் பண்ணப்பட்டச் செய்தித்தொகுப்பை வேரொரு நபரை வைத்து பிளாப்பியில் காப்பி எடுத்துக்கொண்டுவந்து சென்னையில் அந்தப்பணியை முடிக்கவேண்டியதாயிற்று.

38. ஆக திருவைகுண்டத்தில் எடுத்த பிழைகளும், தவறுகளும், பல மாற்றங்களுக்கும் உரியதான அந்த நகலில் ஒரு சில காப்பிகள் எடுத்து வைத்திருந்தேன். அதில் ஒன்றை எனக்கு மிக்க அறிமுகமான ஒரு சகோதரருக்கு கொடுத்து அனுப்பினேன். அது திருத்துவதற்கான நகல், அதை யாருக்கும் விநியோகம் செய்யக்கூடாது என்றும் சொல்லி அனுப்பினேன். ஆனாலும் சில சூழ்நிலைகளினிமித்தமாக செய்தித்தொகுப்பின் சாரம்சம் காட்டுத் தீ போல் பல இடங்களுக்கு பரவி விட்டது. ஆனால் அந்த செய்தித்தொகுப்பு செப்டம்பர் மாத மத்தியில் தான் விநியோகம் செய்யப்பட்டது. இந்தச் சம்பவத்திலிருந்து இனி திருத்தப்படாத நகல்களை அது விநியோகத்திற்கு தயாராக இல்லாத நிலையில் எவ்வளவுதான் நெருக்கமான சகோதரர்களாக இருந்தாலும் அதை அவர்களுக்குக் கொடுக்க கூடாது என்ற பாடத்தைக் கற்றுக் கொண்டேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

39. 2004, ஆகஸ்ட் மாதம், 22-ம் தேதி ஞாயிறு ஆராதனை முடிந்தவுடன் எனது வழக்கத்தின்படி பாஸ்டருடைய வீட்டில் முகப்புக் கூடத்தில் வந்து உட்கார்ந்தேன். எனக்கு அறிமுகமான ஒரு சகோதரரன் என்னிடம் வந்து, சகோதரனே, உங்கள் செய்தித்தொகுப்பு ஒன்றைத் தாருங்கள் என்று கேட்டார். நான் அது தயார் ஆகவில்லை. ஆனவுடன் தருகிறேன் என்று கூறினேன். இது தான் உண்மை. ஆனால் செய்தித்தொகுப்பின் விபரம் இங்கு வரை வந்து எட்டிவிட்டது என்பதை யூகித்துக் கொண்டேன். விசுவாசிகள் அனைவருக்கும் வலது கை கொடுத்துவிட்டு, வழக்கம் போல் பாஸ்டரும் வந்து உட்கார்ந்தார். ஆனால் என்னிடம் வழக்கமாக உட்கார்ந்து பேசுவதுபோல் எதுவும் பேசவில்லை. இந்நிலையில் புதுக்கோட்டையிலிருந்து சகோ.சம்பத் வந்தார். இவர் எனக்கும் ஒரு அறிமுகமான சகோதரர். சகோ.சம்பத் மற்றும் பாஸ்டர் இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்தில் பாஸ்டர் எழுந்து சென்று விட்டார். நானும் சகோ. சம்பத் பேசிக்கொண்டிருந்தோம். ஏதோ ஒரு காரியமாக பாஸ்டர் சுறுசுறுப்பாக இருக்கிறார், ஆதலால் தான் எங்களிடம் உட்கார்ந்து பேச அவருக்கு சமயம் இல்லையென நினைத்துக் கொண்டேன். சிறிது நேரத்திற்குப் பின் பாஸ்டர் வந்து, எங்கள் இருவரையும் மதிய உணவுக்கு அழைத்தார். சகோ.சம்பத், தான் உபவாசம் என்று கூறி விடைப்பெற்றுக்கொண்டு சென்றுவிட்டார். ஆக நானும், பாஸ்டரும் மதிய உணவுக்கு வழக்கம்போல் உட்கார்ந்தோம். உணவு வேளையில் சகோதரியிடம் இருந்த பழைய புன்சிரிப்பு எதுவும் காணப்படவில்லை. என்னுடைய எண்ணங்கள் சிதற ஆரம்பித்தன. ஆனாலும் சாப்பாட்டு வேளையில் பாஸ்டர் என்னுடைய சுக நலங்களை விசாரித்துக்கொண்டார். கடந்த இரு மாதங்களாக எனது மருந்து செலவிற்காக பிரதி மாதம் ரூ.500/- கொடுத்து வந்ததால், மாத்திரைகள் ஒழுங்காக சாப்பிடுகிறீர்களா என கேட்டுக்கொண்டார்.

40. மதிய உணவு வேளையில் VOGR அமெரிக்கா, தீர்க்கத்தரிசியின் செய்தியை தவறாக ஏழு முத்திரைகளில் பிரிண்ட் செய்திருப்பதைக் குறித்து நான் பேச, அதில் தனது ஒருமனத்தை பாஸ்டர் வெளிப்படுத்தினார். அவரும் என்னிடம் அப்.1:9ஐ குறிப்பிட்டு, **அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது** என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளது. அது மேகம் அல்ல. மாறாக அது பரிசுத்தவான்களுடைய கூட்டம். அந்தக்கூட்டம் ஒரு மேகம் போல் தோன்றியது எனக்கூறினார். அடுத்து ஸ்திரீகள் சுடிதார் ஆடைகள் அணியவே கூடாது. அது சினிமா நடிகைகள் அறிமுகப்படுத்திய ஆடைகள் எனக்கூறினார். இப்படியாக வழக்கம்போல சில ஆவிக்குரிய, சபைக்கடுத்த காரியங்களை மதிய உணவு வேளியில் பரிமாறிக்கொண்டோம். மதிய உணவு முடிந்தது. இருவருமாக வீட்டு முகப்புக்கூடத்திற்கு வந்தோம்.

41. வழக்கமாக மதிய உணவுக்குப்பின் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து பின் நான் ஜெபிக்க அவர் எனக்கு காணிக்கை கொடுத்து, என்னை அவர் வீட்டிலிருந்து இரட்டை ஏரி என்ற இடம் வரைச் செல்ல பைக்கில் ஒரு சகோதரனை அனுப்பி வைப்பார். ஆனால் அன்று சாப்பாடு முடிந்தவுடன் அவர் மீண்டும் வெளியே சுறுசுறுப்பாக இருந்தார். சிறிது நேரம் கழித்து மூன்று சகோதரர்களுடன் வந்தார். அனைவரும் வந்து அமர்ந்தனர். நான் ஏதோ சம்திங் நடக்கிறது என்பதை ஆவியில் உணர்ந்துக்கொண்டேன்.

42. சம்திங் நடப்பது எனக்காகத் தானோ அல்லது வேறு ஏதாவது காரியமாகவோ என்று அறிய, பாஸ்டரிடம், சகோதரரே நான் புறப்படுகிறேன் நேரம் ஆகிறது என்றேன். கொஞ்ச நேரம் இருங்கள்.. ஒரு சகோதரன் வரயிருக்கிறார். அவர் வந்தவுடன் உங்களை பைக்கில் அனுப்பி வைக்கிறேன் எனக்கூறினார். ஆனால் அது தந்திரமுள்ள நாவாக இருந்ததை பின் அறியவந்தேன். அவரது வாய் அவரது அக்கிரமத்தை சொல்லிக் காட்டியது.

43. சிறிது நேரத்தில் சென்னை சபையில் கேசியோவில் இசை இசைக்கும் சகோதரனும் (இவர் போக்குவரத்துக் காவலர் (Traffic Police) என நினைக்கிறேன) மற்றும் எனக்குச் சற்று அறிமுகமான சகோ. டேனியேலும் வந்து உட்கார்ந்தார்கள். இசை இசைக்கும் சகோதரர் என் பக்கத்திலும், சகோ.டேனியேல் எனக்கு எதிராகவும் உட்கார்ந்தார்கள். பின் இருவரும் இடம் மாற்றி எனக்கு எதிராக இசை இசைக்கும் சகோதரனும் சகோ.டேனியேல் எனக்கு அடுத்தும் உட்கார்ந்தார்கள். ஆக இப்பொழுது வீட்டு முகப்புக் கூடத்தில் நான் பாஸ்டர், மற்றும் ஐந்து சென்னை சபை சகோதரர்கள் இருந்தோம். இவ்வாறாக வழக்கு விசாரணைக்கான ஆயத்தங்கள் யாவும் திரை மறைவில் நடந்து முடிந்தது. வழக்கு விசாரணை ஆரம்பமானது. நான் அதை எதிர்க்கவும் இல்லை, பின் வாங்கவும் இல்லை. நான் என்னை சுதாரித்துக் கொண்டேன்.

44. வாதி பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாரின் ஐந்து வக்கீல்களில் மூத்த வக்கீலாக இசை இசைக்கும் சகோதரர் இருந்து, பிரதி வாதியாகிய என்னிடம் கேள்விகள் கேட்க ஆரம்பித்தார். கேள்விகள் யாவும் திருமண முத்தம் குறித்தும், அது தவறு என்று நான் எழுதிய செய்தித்தொகுப்பு குறித்தும், என்னுடைய ஊழிய அழைப்புக் குறித்ததுமாக இருந்தது. கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஆவியானவர் வழிநடத்தியபடி பதில் கொடுத்தேன். சத்தியத்திற்கு ஏற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு, கர்த்தருடைய ஆவியானவர் எனக்கு நாவைத் தந்தார். இடையிடையே கேட்கும் கேள்விகளுக்கு மட்டும் சரியான பதில் கொடு அல்லது இங்கிருந்து எழும்பிப் போய்விடு என்ற கடுமையாக சொல் வாதியின் மூத்த வக்கீல் வாயிலிருந்து வந்தது. முதியோரின் முகங்கள் மதிக்கப்படவில்லை. இது சென்னை சபையின் கலாச்சாரம் போல் தெரிகிறது.

45. முதலில் வந்த மூன்று வக்கீல்களில் ஒருவர் என்னை நோக்கி: நீங்கள் சுவிசேஷகனாக இருப்பதினால், ஒரு பாஸ்டரின் கீழ் அடங்கியிருந்து ஊழியம் செய்வதை விட்டு விட்டு, பாஸ்டரின் உபதேசங்களை தவறு என்று கூறுகிறீர்களே இது சரிதானா என்றார். இவருடைய கேள்வியிலிருந்து இவர் செய்தியில் எவ்வளவு வளர்ந்தவர் என்பதைப் புரிந்துக்கொண்டேன். ஐந்து வகை ஊழியத்தைப் பற்றி அடிப்படையே அறியாதவர்கள் ஐந்து வகை

ஊழியத்திலுள்ள ஒருவனை நியாயம் விசாரிக்க வந்தது அறிந்து துக்கப்பட்டேன். பாஸ்டரைப் போன்று தான் அவரது வக்கீல்களும் இருந்தனர்.

46. இந்நிலையில் சிறிது நேரம் சகோ.டேனியேலிடம் ஐந்து வகை ஊழியம் குறித்துப் பேசினேன். பின் அவர் என்னிடம் நீங்கள் பாஸ்டரிடம் அவர் உபதேசங்கள் தவறு என்று கூறிகிறீர்கள். அவர், அவருடைய உபதேசங்கள் சரிதான் என்று சாதிக்கிறார். அது அத்துடன் முடிந்துவிட்டது. ஆதலால் அதை மறுத்து உங்கள் செய்தித்தொகுப்பு தேவையற்ற ஒன்று என்று கூறினார். தேவனுடைய சபையில் தவறான உபதேசம் என்று ஒன்றைக் குறித்து நான் ஆவியில் உணர்த்தப்படும்போது அதை கண்டிக்க வேண்டியவனாக இருக்கிறேன் என்றேன். சொல் வழியாக மட்டும் அல்ல எழுத்து வழியாகவும் அது சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் இருக்கும் என்றேன்.

47. இக்கட்டத்தில் வாதியாகிய பாஸ்டர் நாம் முன்பே தியானித்த கே.ப. 73ஐ கொண்டு வந்து சாட்சியாக அதை வாசித்தார். வழக்கு விசாரணை மதியம் சுமார் 2.30 மணி முதல் 3.45 வரை நடந்தது. மூத்த வக்கீல் கொஞ்சம் கடுமையாக இருந்தாலும் இதர நான்கு வக்கீல்களும் மிகவும் சாந்தமாகவே இருந்தனர். வழக்கு விசாரணை ஒரு அமைதியான சூழ்நிலையில் முடிந்தது. அதற்காக கர்த்தருக்கு நன்றி செலுத்தினேன்.

48. முடிவில் நீதிபதியாகவும், வாதியின் மூத்த வக்கீலாகவும் இருந்த போக்குவரத்துக் காவலர் சகோதரன் நிருபிக்கப்படக்கூடாத குற்றங்களை என் மேல் சுமத்தினார். அவையாவன:

அ) பிரதிவாதியாகிய நான் இக்காலத்திற்குரிய செய்தியில் அரைகுறை அறிவு உள்ளவன்.

ஆ) பிரதிவாதியாகிய எனக்கு செய்தியில் சரியான தெளிவு கிடையாது.

இ) நான் செய்தியை முற்றிலுமாக விசுவாசிப்பதில்லை. எனக்குத் தேவையானவைகளை மட்டும் எனக்குச் சாதகமாக எடுத்துக் கொள்ளுகிறேன். மற்றவைகளை நிராகரிக்கிறேன்.

ஈ) நான் இக்காலத்திற்குரிய செய்தியிலுள்ள பாஸ்டர்களை தரக்குறைவாக எழுதி வருகிறேன். பாஸ்டர்களுக்கு மேல் என்னை அதிகாரியாகவும் நியாதிபதியாகவும் ஏற்படுத்தியது யார் என்றார். இதே கேள்வியைத் தான் ஒரு நாள் மோசேயிடமும் கேட்டார்கள்.

உ) நான் ஒரு ஊழியக்காரனே அல்ல என்று வாய் மொழிச் சான்றிதழ் கொடுத்தார்கள்.

ஊ) நான் WBGNS-ல் பணிபுரியும் சகோ. டேவிட் பற்றியும் தரக்குறைவாக பேசி, எழுதி வருகிறேன். அவர் என் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடர இருக்கிறார் என்றார்.

எ) என்னுடைய ஊழியத்தை கோவை சகோ. கே.ராஜா ஊழியத்தோடு ஒப்பிட்டு பேசினார்கள். ஆனால் சகோ.ராஜாவோடு நான் ஊழியத்தில் அன்று முதல் இன்று வரை இசைந்து, இணைந்து சென்றது கிடையாது. நூற்றுக்குத் தொண்ணூறு உபதேசங்களில் எனக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடுகள் உண்டு, ஒருமனப்பாடு கிடையாது. இவர் தனது 15.9.2004 சுற்றறிக்கையில் நான் சபைகளின் குறைகளைச் சுட்டிக் காட்டாமல் சபையை குறைக் கூறுகிறேன். ஆதலால் நான் **பிசாசின் மகன்** எனவும், நான் 2004 மார்ச் மாதம் பாஸ்டர் ஜான் ஐசக் சபையில் நடந்தக் காரியங்கள் குறித்து எழுதிய சுற்றறிக்கைகளில் பொய்களே காணப்படுகிறது எனவும், இன்னும் என் மீது அநேக குற்றச்சாட்டுக்களையும் எழுதியுள்ளார். ஒரு புதிய வெளிப்பாடுடன் நான் எனது சுற்றறிக்கைகளில் ஒரு குறிப்பிட்ட ஜாதியை மறைமுகமாக தாக்கியுள்ளேன் எனவும் எழுதியுள்ளார். இவைகளை பாஸ்டர் ஜான் ஐசக் ஒப்புதல் எதுவும் இல்லாமல் தன் சுயமாகவே எழுதியுள்ளார் எனவும் அறிய வந்தேன்.
என்னை **பிசாசின் மகன்** என்று எழுதுவதற்கான தகுதி இவருக்கு தேவனால் உண்டாயிருந்தால் அதற்காக நான் அவருக்கு நன்றி கூறியிருப்பேன். ஆனால் இந்தத் தகுதி பாஸ்டர் ஜான் ஐசக் போட்டுக்கொண்டிருக்கும் எலும்புத் துண்டுகளால் உண்டாயிருப்பதால், அந்த எலும்புத் துண்டுகள் அவர் வாயில் இருக்கும் வரை, பாஸ்டர் ஜான் ஐசக்கை சந்தோஷப்படுத்த, இவர் எனக்கு விரோதமாக உறுமிக்கொண்டுதான் இருப்பார். பாஸ்டர் ஜான் ஐசக்குக்கு இவர் முற்றிலும் புதுசு ஐயா புதுசு. ஆனால் எனக்கு இவர் முற்றிலும் பழசு ஐயா பழசு. இவருடைய ஒவ்வொரு அசைவுகளையும் நான் அறிவேன். ஆதலால் ஒன்று மட்டும் இவருக்கும், இவரது ஆதரவாளர்களுக்கும் கூறிக்கொள்ளவிரும்புகிறேன். அதாவது இவருக்கு பைபிளை கைகளில் தூக்க தகுதியே கிடையாது. ஏனென்றால் இவருடைய ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதைக் கண்டுக் கொண்டவர்கள் சிலர். ஆனால் காணாது ஏமாந்தவர்கள், ஏமாந்துக்கொண்டிருப்பவர்கள் பலர். இவருடைய உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் ஒரே பொய்யும், புரட்டும், உருட்டும்; சூதும், வஞ்சனையும் நிறைந்துள்ளது.

ஆனாலும் கிறிஸ்துவின் அன்பில் நான் அவரை நேசிக்கிறேன். நான் இன்று கூட பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார், சகோ.டேவிட் முதற்கொண்டு எனது செய்தித்தொகுப்புகளில் இடம் பெற்றுள்ள அனைவரையும் எனக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவஅன்பு என் இருதயத்தில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால் நேசிக்கிறேன். ஆனால் அவர்கள் என்னை நேசிக்கிறார்களோ அல்லது என்னை வெறுக்கிறார்களோ, அது அவர்களுடைய சுயாதீனம். ஆனால் பொதுவாக என்னை அவர்கள் வெறுப்பதையே நான் காண்கிறேன். அதற்காக நான் ஒன்றும் செய்யமுடியாது. ஆனால் நான் எக்காரணம் கொண்டும் அவர்களுடைய தவறுகளுடன் என்னை அடையாளம் காட்டிக் கொள்ளமாட்டேன். அவர்களுடைய தவறாக போதனைகளுடன் என்றும் உடன்படவும்மாட்டேன். அது உறுதி.

நான் சபையின் குறைகளைச் சுட்டிக்காட்டாமல், சபையை குறைகூறுகிறேன், ஆதலால் நான் பிசாசின் மகன் என்று வர்ணித்துள்ளார். ஆனால் தன் குற்றச்சாட்டுகளுக்கு எனது செய்தித்தொகுப்புகளிலிருந்து எதுவும் ஆதாரமாக எழுதவில்லை. இவர் 1.1.2003 அன்று ஒரு சுற்றறிக்கை வெளியிட்டார். அதில் சில பத்திகளின் சாராம்சங்களை கீழே தருகிறேன்.

அ) கோவையில் ஒரு சபை இருக்கிறது. அதன் பெயர் ஜீவகூடாரம். பெயர்தான் ஜீவகூடாரம். ஆனால் அது உண்மையிலேயே ஆவிக்குரிய மரணக்கூடாரம். (பக்கம் 3, பத்தி 1)

ஆ) ஒரு சிலர் இதெல்லாம் நமக்கு எதற்கு வம்பு? அடுத்தவர்களை நியாயம் தீர்க்க நாம் யார்? என்று சப்பைகட்டு கட்டிவிட்டு, இப்படிப்பட்ட ஊழியக்காரர்களோடு, உலகத்தின் இழிவான ஆதாயங்களுக்காக தொடர்பு வைத்துக்கொண்டு விசுவாசிகளை இளிச்சவாயன்களாக நினைத்துக் கொண்டு வருகிறார்கள். இதற்கு அநேக உதாரணங்களைக் காட்ட முடியும். உதாரணத்திற்கு கோவை ஜீவ கூடார சபையாகும்! (பக்கம் 7, பத்தி 9)

இ) கோவை ஜீவ கூடார சபை இன்னும் 2 மாதத்தில் உடையப்போவதாக கருத்து நிலவுகிறது. ஏன்?... அந்த சபையானது ஆவிக்குரிய விபசாரத்தில் மூழ்கியிருக்கிறது. (பக்கம் 8, பத்தி1)

பிரியமானவர்களே, இது ஒரு சபையின்' குறைகளைக் குறித்த குற்றச்சாட்டா? அல்லது ஒரு சபையைக் குறித்த குற்றச்சாட்டா என்பதை நீங்களே நிதானித்துக் கொள்ளுங்கள். மேலும் சகோ.ராஜாவின் எழுத்துப்படி பிசாசின் மகன் யார் என்பதையும் நீங்களே முடிவு எடுத்துக்கொள்ளுங்கள்.

மேலும் அன்று சகோ.ராஜா **கோவேறிக் கழுதை** என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளியிட்டு அதில் **ஸ்தாபனத்திலே பெண் பார்க்கும், மாப்பிள்ளை பார்க்கும், வசதியான இடமாகத் தேடும், உலகப்பிரகாரமான படித்த இடமாகத் தேடும்! ஸ்தாபனத்தில் உள்ளவர்களை இரட்சிக்கவே, ஓர் ஆத்துமாவை கொண்டுவரவே, ஸ்தாபனத்தில் என் பையனுக்கு பெண் பார்த்தேன். ...கேவலம் அவிசுவாசக்கூட்டம், கடைசிக்கால செய்திச் சபையில் இது ஏராளம்... ஏராளம். கோணலும் மாறுபாடும் நிறைந்த சாப்ப சந்ததி** என்று எழுதினார். அன்று எதை சாப்ப சந்ததி என்றுக் கூறினாரோ இன்று அதே காரியத்தைச் செய்த அதாவது விசுவாசிக்கு ஸ்தாபனங்களில் அவிசுவாசி பெண்ணை திருமணம் துணிகரமாக செய்துவைத்த பாஸ்டர் ஜான் ஐசக்கை புகழ்ந்து, தாரை ஊதி, தப்பட்டம் அடித்து வருவது என்ன? இவரும் தன்னை சுவிசேஷகன் என்றுக் கூறிக்கொண்டு ஊரை சுற்றித் திரிவது ஒரு வெட்கக்கேடே. இவர் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல் தன் வயிற்றுக்கே ஊழியம் செய்து, சோறு கண்ட இடம் சொர்க்கம் என்ற பழமொழிக்கேற்றாற்போல் தன் காலத்தை ஓட்டிக்கொண்டு; நயவசனிப்பினாலும், இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சித்து வருகிறார். பாஸ்டர் ஜான் ஐசக் போடும் சோற்றுக்காக கூலிக்கு மாறடிக்கிறார். தன் மனம் போன போக்கில் போதனைகளைச் செய்து தன்னை ஒரு பொருட்டாக எண்ணி பந்தாப்பண்ணிக்கொண்டு பலரை ஏமாற்றிக் கொண்டு திரிகிறார். இவரை நம்பி ஒரு கூட்டம் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை பாழாக்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

இவர் மேலும் என்னைக் குறித்து தனது 2.10.2004 **அரைமணி** நேர **அமைதல்** செய்திக்கான விளம்பர பந்தா நோட்டீஸ்யில் அநேக காரியங்களை எழுதியிருந்ததாகவும் பாஸ்டர் ஜான் ஐசக் மற்றும் அவரது சபையினர் அப்படிப்பட்டக் காரியங்களை நோட்டீஸ்யிலிருந்து எடுத்து விடவேண்டும் என்று திட்டவட்டமாகக் கூறியதினால் அதை அவர் எடுத்துவிட்டாதாகவும் அறியவந்தேன்.

இவர் கூட்டம் நடத்திய அன்று காலை சில ஊழியர்கள் என்னிடம் கர்த்தருடைய வருகை 1963-ல் வந்து விட்டது என்று இவர் பிரசங்கிக்கயிருக்கும் உபதேசம் குறித்து எனது கருத்துக்களைக் கேட்க ஆவலாய் வந்திருந்தார்கள். நான் அவர்களிடம் ஏழு தூதர்கள் கூட்டம்தான் கர்த்தருடைய இரண்டாம் வருகை, அது தான் **அரைமணிநேர அமைதல்** என்று தீர்க்கதரிசியின் செய்தியிலிருந்து சகோ.ராஜா எடுத்துக்காட்டுகளை கொடுப்பாராகில் நான் என் ஊழியத்தை நிறுத்திவிடுகிறேன் என்று கூறுகிறேன். யூகம் எதுவும் இருக்ககூடாது. நேரிடையான பதில் இருக்கவேண்டும் என்றும் கூறி அவர்களை அனுப்பினேன். கர்த்தருக்குச் சித்தமானால் கர்த்தருடைய வருகை காலதாமதமாகுமானால், நானும் உயிரோடிருந்தால் டிசம்பர் 2004 அல்லது ஜனவரி 2005-ல் இயேசுகிறஸ்துவின் இரண்டாம் வருகை 1963-ல் வந்துவிட்டது என்ற உபதேசம் பேய்த்தனத்துக்கடுத்தது என்பது குறித்து எழுதுவேன். அதற்காக ஆயத்தப்பட்டுக்கொண்டு வருகிறேன். உங்கள் ஜெபம் எனக்குத் தேவை. சகோ.ராஜா கோவையில் காமராஜ் நகரில் வசித்துவந்தபோது அவரது வீட்டில் சபை கூடிவந்த நாட்களிலும், இவரது தம்பி சகோ.லாரன்ஸ் வீட்டில் சபை கூடிவந்த நாட்களிலும் இவரது இந்த உபதேசம் தவறு என நான் அன்றே பிரசங்கித்திருக்கிறேன். சகோ.ஜான் ஐசக் சபையிலும் பிரசங்கித்திருக்கிறேன்.

சத்தியத்திற்குப் போலியாயுள்ளதை நாம் இக்காலத்தில் தான் எதிர்பார்க்கவேண்டுமா? ஆம். நிச்சயமாக... ஜனங்களை குழப்பத்தில் ஆழ்த்துவதற்கென்றே அநேக போலியான செயல்கள் தோன்றும். தேவனிடத்திலிருந்து தோன்றி அவருடைய வார்த்தையுடன் இணைந்துள்ள ஏதாவது ஒன்று எழும்பினால், அதைக் குழப்ப வேண்டுமென்பதற்கே ஏதாகிலும் வேறொன்று சம்பவிக்க வகையுண்டு. சாத்தான் அவ்விதம் செய்ய வேண்டுமெனும் நோக்கம் கொண்டவன். (**ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்**, பக்கம் 13, 14, பத்தி 34, 35) உங்கள் சகோ.ராஜா இதைத்தான் செய்துக்கொண்டிருக்கிறார்.

கர்த்தருடைய இரண்டாம் வருகை குறித்து ஒன்றை உங்களுக்கு முன் கூட்டியே எழுதுகிறேன். செய்தித்தொகுப்பு வெளிவரும்வரை நீங்கள் அதை தியானித்துக்கொண்டிருங்கள். முழு விளக்கம் நீங்கள் இது குறித்து வரயிருக்கிற செய்தித்தொகுப்பில் காணலாம்.

**Watch Christ, First coming, He come a mortal to bleed and die. Is that right? That's His first coming. The Second Coming is the Rapture. We meet Him in the skies. Immortal. His third coming – He's the incarnate God Amen! God Emmanuel to reign on earth. That's right. Only three. (Revelation of the Seven Seals, Page 308, last para in old edition. page 274, para 210 in new edition)**

இது தமிழில் ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு, பக்கம் 521, பத்தி 210-ல் இவ்வண்ணமாக உள்ளது.

**கிறிஸ்துவை கவனியுங்கள். முதலாவதாக, கிறிஸ்து இரத்தம் சிந்தி மரிப்பதற்கென மனிதனாக தோன்றினார். அது சரியா? அது அவருடைய முதலாம் வருகை. எடுத்துக்கொள்ளப்படுதலின்போது அவர் இரண்டாம் முறை வருகிறார். அப்பொழுது நாம் மறுரூபமாகி அவரை ஆகாயத்தில் சந்திப்போம். அவர் மூன்றாவது முறை வருகையில், அவர் தேவ அவதாரமாகயிருக்கிறார். தேவன், இம்மானுவேலாய் பூமியை ஆளுகைசெய்வதற்கென வருகிறார். அது உண்மை. அவர் மூன்று முறை மட்டுமே வருகிறார்.**

பாருங்கள், The second coming of Christ is rapture. அதாவது அவர் இரண்டாம் முறை வருகிறது எடுத்துக்கொள்ளப்படுதல். சபை எடுத்துக்கொள்ளப்படும்போது அவர் இரண்டாம் முறை வருகிறார். அப்பொழுது நாம் அவரை ஆகாயத்தில் சாவாமையுடையவர்களாய் சந்திப்போம். இப்பூமியில் வேறொரு பரிமானத்தில் அல்ல. அடுத்து The Rapture என்ற செய்தியில் பத்தி 129, 130 ஐ நன்கு கவனியுங்கள்.

Notice, from the 13th to the 16th verse there's three things that has to happen before the Lord Himself appears.

பாருங்கள், கர்த்தருடைய வருகை வருமுன், அதாவது கர்த்தர் தாமே பிரசன்னமாகுமுன் மூன்று காரியங்கள் 13 வசனம் முதல் 16 வசனம் வரை கூறப்பட்டுள்ளது நடைபெற வேண்டும். இந்த மூன்று காரியங்களும் கர்த்தர் தாமே தோன்றுமுன் நடக்க வேண்டும்.

அடுத்து, Three things happened, a voice – a shout, a voice, a trumpet, has to happen before Jesus appears.

பாருங்கள் இயேசு வெளிப்படுமுன் மேற்கூறிய மூன்று காரியங்களும் நடைபெறவேண்டும்.

இந்த பத்தி 129, 130-ல் தமிழ் மொழிப்பெயர்ப்பு சரியில்லை. எப்படி VOGR ஜெபர்சன்வில்குள் சாத்தான் நுழைந்துவிட்டானோ, அவ்வாறே WBGNS குள்ளும் நுழைந்து சத்தியத்தை தாறுமாறாக்கி வருகிறான். நாள்தோறும் WBGNS யினுடைய தவறான தமிழ் மொழிப்பெயர்ப்புகளைக் கண்டு, கேட்டு என் இருதயத்தில் வாதிக்கப்படுகிறேன். இது இன்னும் எத்தனை காலம்? எங்கள் மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்?

பிரியமானவர்களே, சகோ.ராஜாவின் உபதேசம் லௌகிக சம்பந்தமானது, ஜென்ம சுபாவத்திற்குரியது, பேய்த்தனத்துக்கடுத்தது. ஆதலால் நீங்கள் மேலே தீர்க்கதரிசியால் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான

வசனத்தை, ஆரோக்கியமான உபதேசத்தை நன்றாய் பற்றிக்கொள்ளுங்கள். இது கொடிதான வஞ்சிப்பின் காலம். சகோ.ராஜாவை போன்றவர்கள் மனதை மயக்குகிறவர்களாயிருந்து, இழிவான ஆதாயத்துக்காகத் தகாதவைகளை உபதேசித்து, முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப் போடுகிறார்கள். 2.10.2004 அன்று சென்னை, எழும்பூர், பாண்டியன் ஓட்டலில் செலவு ரூ.15,000/- பாழானது. தினசரி கூலி வேலைகள் செய்து தசமபாகம், காணிக்கை கொடுத்தவர்கள் பணம் பாழானது. பிரியமானவர்களே, நீங்கள் நெற்றி வேர்வை நிலத்தில் விழ பாடுபட்டு சம்பாதித்த பணத்தை பந்தா ஊழியத்தில் பாழாக்கிவிட்டீர்கள். இனியாவது எச்சரிக்கையாயிருங்கள். சாத்தான் உங்களை வஞ்சித்து விட்டான். இது கொடிதான வஞ்சிப்பின் காலம் ஐயா.

முடிவாக சகோதரனே என்னைக் குறித்து எழுதியதினால் நான் ஒன்றும் வருத்தப்படவில்லை. என்னைக் குறித்து எழுத உங்களுக்கு முழு உரிமையுண்டு. ஆனால் உங்களுக்குத் தகுதி உள்ளதா என்பதை மட்டும் உறுதிப்படுத்திக்கொண்டு செயல்படுங்கள். நிச்சயமாக உங்களை ஆவிக்குரிய ரீதியில் எதிர்க்க, சந்திக்க என்னிடத்தில் போதுமான தேவ பெலன் உண்டு. அதை மறந்து விடாதீர்கள்.

2004, மார்ச் மாதம் 3-ம் தேதி சபை ஆராதனை முடிவில் பாஸ்டர் ஜான் ஐசக் முன்வைக்கப்பட்ட தராசில் ஒரு தட்டில் நானும், மற்றொருத் தட்டில் சகோ.ஜோசப் மற்றும் சகோ.தாமஸ் நின்றார்கள். நான் சத்தியத்திற்காக நின்றேன். அவர்கள் தங்கள் சுயநல ஆதாயத்திற்காக நின்றார்கள். பாஸ்டருக்கு ஒரு தட்டை ஏற்றுக்கொண்டு அடுத்த தட்டை கைவிடவேண்டும். இரு தட்டையும் சீர்தூக்கிப் பார்த்தார். சத்தியம் தள்ளுபடி ஆயிற்று. ஏனென்றால் என்னால் அவருக்குச் செலவு தான். அடுத்தத் தட்டை பார்த்தார் அந்த திருமணத்தை அவர் நடத்திவைக்காவிட்டால் அவர்கள் இருவரும் நிச்சயமாக சபைக்கு வரமாட்டார்கள். ஆதலால் ஒரு கணிசமான தொகை மாதந்தோறும் காணிக்கையாகவும், தசமபாகமாகவும் வருவது நின்றுவிடும். அதை விட்டுக்கொடுக்க பாஸ்டர் ஜான் ஐசக்குக்கு மனம் இல்லை. ஏனென்றால் அவர் ஒரு முழு நேர ஊழியர். ஆதலால் மனம், பணம் பக்கம் சாய்ந்தது.

ஏ) இந்தக் குற்றச்சாட்டுக்களை என் மீது கூறி சென்னை உயர்நீதிமன்றத்தில் என் மீது வழக்குத் தொடர வக்கீல்களை சந்தித்து வருவதாகக் கூறி என்னை எச்சரித்து அனுப்பினார்கள்.

49. வாதி பாஸ்டர் அடுத்து சபை கூடுதலுக்கு நேரம் மாலை நான்கு மணி ஆகிவிட்டது. இத்துடன் முடித்துக்கொள்ளுவோம் என்று கூறி எழுந்திருக்க, அனைவரும் எழுந்திருந்தோம். முடிவில் வாதி பாஸ்டர் ஜெபம் செய்தார். நான் அனைவரிடமும் வலது கை கொடுத்து விடைப்பெற்றுக்கொண்டு வெளியே வந்தேன்.

50. இப்பொழுது இந்த வழக்கு விசாரணைக் குறித்து எனது கருத்தையும் எழுதுகிறேன்.

அ) தேவனுடைய சபையில் ஐந்து வகை ஊழியத்தில் சுவிசேஷகனாக மூன்றாவது இடத்திலுள்ள ஒருவனை உபதேசங்களுக்கடுத்த காரியங்களில் சென்னை சபையில் விசுவாசிகளாகிய ஒரு சிலரைக் கொண்டு வழக்கு விசாரணை நடத்த பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாருக்கு எந்த விதத்திலும் அதிகாரம் இல்லை.

ஆ) ஆவிக்குரியவர்களைக்கொண்டு இந்த வழக்கு விசாரணை நடத்தப்படவில்லை. கிறிஸ்துவுக்குள் வளர்ந்து வரும் குழந்தைகளைக் கொண்டும், மாம்சத்திற்குரியவர்களைக் கொண்டும் வழக்கு விசாரணையை நடத்தியது பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாருக்கு அழகு அல்ல. வாதியும், அவரது வக்கீல்களும், நீதிபதியும் குழந்தைகளுக்கேற்றப் பிரகாரமாகவே யோசித்தார்கள், சிந்தித்தார்கள், பேசினார்கள்.

இ) இந்த வழக்கு விசாரணை தேவனுடைய வார்த்தையின் அடிப்படையிலும், இக்காலத்திற்குரிய செய்தியின் அடிப்படையிலும் இல்லை. மாறாக சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளும் ஒரு பாஸ்டருடைய ஆணவத்திற்கு உட்பட்டதாயிருந்தது.

ஈ) வழக்கு உபதேசங்களுக்கு அடுத்த காரியமாக இருந்ததால் பாஸ்டர் தன் சபையில் சத்தியத்தை சரியாக அறியாத, ஐந்து வகை ஊழியத்தைப் பற்றி சரியான அறிவு இல்லாத இளம் விசுவாசிகளைக் கொண்டு வழக்கு விசாரணை நடத்தியது மிகத் தவறு. இது பாஸ்டரது ஆவிக்குரிய நிலையை எடுத்துக் காட்டியது. எதை எவ்வாறு செய்யவேண்டும் என்ற ஆவியின் வழிநடத்துதல் பாஸ்டரிடம் காணப்படவில்லை.

உ) ஐந்து வகை ஊழியத்திலுள்ள இரு ஊழியர்களுக்குள்ள உபதேசங்களுக்கடுத்தக் காரியங்களை விசாரிக்க பாஸ்டர் தனது சபையிலிருந்து தனக்கு துதிபாடும் சிலரைக் கொண்டு வந்தது தவறு.

ஊ) நான் சபைக்கு வந்தது முதல் திரைக்குப் பின் நடந்த இத்தனை காரியங்கள் தேவை தானா? இது ஒரு ஆவிக்குரிய மனிதனின் நடத்தையா? ஒரு ஆவிக்குரியவன் திரைக்குப் பின் இருந்துக் கொண்டு சூழ்ச்சிகளை செய்ய மாட்டானே? பாஸ்டருடைய கிரியைகளே அவர் யார் என்பதை நிருபிக்கிறது. திரைக்குப் பின் இருந்து சூழ்ச்சியை செய்வது சாத்தானுடைய செயலே.

எ) இது தான் ஒரு பாஸ்டர் ஒரு சுவிசேஷகனை நடத்தும் விதமா? இது சோறுப் போட்டுக் கழுத்தை அறுத்தக் கதை அல்லவா? சாப்பாடு மேஜையில் பந்தி. ஆனால் மேஜை மேலே கத்தி தொங்கவிட்டிருந்த கதையல்லவா? ஏன் இந்த மாய்மாலம்?

ஏ) சபை முடிந்தவுடன் பாஸ்டர் என்னிடம் வந்து சகோதரனே உங்கள் செய்தித் தொகுப்புக் குறித்து அறிய வந்தேன். அது குறித்து நான் உங்களுடன் எனது சபையிலுள்ள சில சகோதரர்களை சாட்சியாகக் கொண்டு பேச விரும்புகிறேன் எனக் கூறி அவர்கள் முன்னிலையில் பாஸ்டர் என்னிடம் பேசியிருக்கலாம். நானும் அதற்கு விளக்கம் கொடுத்திருப்பேன். இதை விட்டு விட்டு திரை மறைவில் இத்தனை நாடகம் ஏன்? இந்த வழக்கு விசாரணை ஏன்? தன்னை ஒரு மூத்த பாஸ்டர் என்று கூறும் இவருக்கு இது அழகா? தேவனுடைய சபைக்கு ஆவிக்குரிய புருஷன் என்று கூறுகிறவருக்கு இது இலட்சணமா?

ஐ) திரை மறைவு சூழ்ச்சி தான் பாஸ்டர் தேவனுடைய வார்த்தையிலிருந்து இக்காலத்திற்குரிய செய்தியிலிருந்து கற்றுக் கொண்ட அணுகுமுறையா? நான் என்னுடைய ஒவ்வொரு செயலுக்கும் தேவனுடைய வார்த்தையிலிருந்து, இக்காலத்திற்குரிய செய்தியிலிருந்து எடுத்துக்காட்டுகளை அவ்வப்பொழுது எழுதிவருகிறேனே. அவ்விதமாக பாஸ்டர் தன்னுடைய இச்செயலுக்கு எடுத்துக்காட்டுகளை கூற முடியுமா?

ஒ) என்னை இவர்கள் தேவனுடைய ஊழியக்காரன் என்று ஏற்றுக்கொள்ளாமல் போனாலும் என்ன? அவர்களுடைய ஏற்றுக்கொள்ளாமை கர்த்தர் என்னை தம்முடைய சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைவதற்காக சுவிசேஷகனாக ஏற்படுத்திய உண்மையை அவமாக்குமோ? அப்படியாக்கமாட்டாது. நான் என்னுடைய ஊழியத்தை என்னுடைய ஒவ்வொரு செய்தித் தொகுப்பிலும் தேவனுடைய வார்த்தையைக் கொண்டும், இக்காலத்திற்குரிய செய்தியைக் கொண்டும் அடையாளம் காட்டிக்கொண்டே வருகிறேன். அதை இவர்கள் காண தவறினால் அதற்கு நான் என்னச் செய்ய முடியும்? தேவன் இவர்களது கண்களை குருடாக்கியிருக்கும்போது அதை எதிர்த்து நிற்க நான் யார்?

ஓ) நான் முற்றிலுமாக செய்தியை விசுவாசிப்பதில்லை. செய்தியில் என்ன உள்ளதோ அதை அப்படியே விசுவாசிக்க வேண்டும் என்றார்கள். பாருங்கள், சில வேளைகளில் தீர்க்கதரிசி வேதாகம மனிதர்களைக்

குறித்து கூறுகிறார். ஆனால் அது வேதாகமத்தில் காணப்படாத ஒன்று. ஆனால் நாம் அதை அப்படியே விசுவாசிக்க வேண்டும் என்கின்றார்கள். அதாவது திருமண முத்தம் வேதத்தில் காணப்படாத ஒன்றாக இருந்தாலும், தீர்க்கத்தரிசியின் விவாக ஆராதனையில் திருமண முத்தம் காணப்படுவதால் யாவரும் அதை அப்படியே கடைப்பிடிக்கவேண்டும் என்று சாதிக்கிறார்கள்.

51. இதற்கு ஆதாரமாக இவர்கள் அன்னாள் குறித்து கூறியதாக எனக்கு நினைவு வருகிறது. இவளைக் குறித்து தீர்க்கத்தரிசி இவள் பார்வை இழந்த அன்னாள் என்று கூறுகிறார். செய்தி: **வார்த்தையினிமித்தம் வரும் நிந்தை**, பக்கம் 45, பத்தி 2. ஆனால் வேதத்தில் அப்படியொன்றும் எழுதப்படவில்லை. ஆதலால் தீர்க்கத்தரிசி கூறியபடியே அவள் பார்வையற்றவள் என்றே நாம் விசுவாசிக்கவேண்டும் என்று கூறுகிறார்கள்.

52. என்னை பொறுத்தளவில் அது தீர்க்கத்தரிசி நமக்கு எடுத்துக்காட்டாக, நமக்கு ஒரு சம்பவத்தை விளக்கிக் கூற ஒருத்தரைக் குறித்து சில காரியங்களை யூகித்து, கற்பனைச் செய்து கூறுவதுண்டு. பாருங்கள் **எழுதப்பட்ட வேதவாக்கியங்களில் ஒன்றை கூட்டவும், குறைக்கவும் யாராலும் முடியாது என்பதை நன்கு நினைவுகொள்ளுங்கள்.** அவள் ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ளவளாக இருந்ததினால் அவளை பார்வை இழந்தவளாக யூகித்து தீர்க்கதரிசி கூறுகிறார். அவ்வளவு தான். ஆனால் பிரன்காம் கிறிஸ்துவின் ஆவி உங்களை பிரன்காம் குறித்து ஒரு உயர்ந்த எண்ணம் கொள்ளவைக்க தந்திரமாக உங்களுடன் இதோ பார்! அவர் தேவனுடைய வார்த்தையில் காணப்படாதவைகளையெல்லாம் கூறுகிறார் என்று கூறி உங்களை திசைத் திருப்புகிறான்.

53. பாருங்கள் உதாரணமாக உங்களுக்கு சில எடுத்துக்காட்டுகளை செய்தியிலிருந்தே எழுதுகிறேன்.
அ) செய்தி: **உன் சுயபுத்தியின் மேல் சாயாதே** பத்தி 161-164 வரை தியானியுங்கள். இங்கு தீர்க்கத்தரிசி சவுலுக்கும் தாவீதுக்கும் இடையே நடந்த ஒரு சம்பாஷனையை யூகித்துக் கூறுகிறார். ஆனால் உண்மையாய் அவர்கள் இருவரும் அப்படி சம்பாஷிக்கவில்லையென்பதை ஆவிக்குரியவர்கள் நன்கு அறிவார்கள். தீர்க்கத்தரிசி தன் செய்தியில் இந்த சம்பாஷனையை கூறியுள்ளதால் அது அப்படியே அன்று சவுலுக்கும் தாவீதுக்கும் இடையே நடந்த சம்பாஷனை என்று நாம் ஏற்றுக் கொள்ள முடியுமா? நமக்கு ஒரு சம்பவத்தை விளக்கி காண்பிக்க அவர் சிலவற்றை யூகித்து, கற்பனை செய்து நமக்கு விளக்கிக் கூறுகிறார். ஆனால் அதை உண்மையாகவே நடந்த சம்பாஷனையென்று நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது.
ஆ) செய்தி: **என் ஊழியத்தின் தற்போதைய கட்டம்** பத்தி 41 முதல் 95 வரை நீங்கள் தியானிக்கலாம். இங்கு தீர்க்கத்தரிசி தேமா குறித்து கூறிக்கொண்டு வருகிறார். பத்தி 78-ல் இதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது என்று கூறுகிறார். ஆம், இங்கு அவர் தேமா குறித்து அநேக காரியங்களை கற்பனை செய்து கூறுகிறார். ஆதலால் அந்தக் கற்பனையை நாம் தேவனுடைய வார்த்தையென்று எடுத்துக்கொள்ள முடியுமா? நமக்கு தேமாவின் காரியங்களை விளக்கி வைக்க அவர் அவனைக் குறித்து ஒரு கற்பனை செய்து அதை நமக்குக் கொடுக்கிறார். ஆனால் இதைக் கொண்டு தேமா அன்று அப்படித் தான் இருந்தான் என்று நாம் கூறமுடியாது.

54. இந்த வழக்கு விசாரணையை இக்காலத்திற்குரிய செய்தியின் அடிப்படையில் அணுகியிருக்கலாம். **ஊழியக்காரர்களாகிய நீங்கள் ஒன்றாக உட்கார்ந்து காரியங்களை விவாதிப்பது அற்புதமாயிருக்குமல்லவா? உங்களுக்கு எங்காவது ஒரு ஐக்கியம் இருக்கவேண்டும். நீங்கள் ஒன்று கூடி விவாதிப்பதற்கு உங்களுக்கு ஏதாவதொன்று இருக்கவேண்டும். நீங்கள் ஒரு கூட்டம் மனிதர்களாக ஒன்று கூடி, ஒருவருக்கொருவர் விசுவாசித்து, இந்தப் பிரச்சனைகளின் பேரில் விவாதியுங்கள். மாதத்திற்கு ஒருமுறை ஊழியக்காரர் மாத்திரம் இவ்விதம் செய்யுங்கள். உங்கள் சபைகளில் ஒன்றில் கூடுங்கள். அங்கு உட்கார்ந்துக்கொண்டு விவாதியுங்கள். மேய்ப்பர்கள் சுவிசேஷகர்கள் ஒவ்வொருவரும் - நீங்கள் யாராயிருந்தாலும். ஏதாவது ஒரு பெரிய பிரச்சனை எழுந்தால், நீங்கள் அதற்கு தீர்வு காணலாம்.** (இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல். பத்தி 114 நாள் 1.6.1962). இந்த வழியை பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் கடைப்பிடித்திருந்தால் நலமாயிருந்திருக்கும். அவரும் மதிப்பிற்கும், மரியாதைக்குரியவருமாயிருந்திருப்பார். நான் இப்படிப்பட்ட காரியங்களுக்காகத் தான் **அன்பின் விருந்து** ஆரம்பித்தேன். ஆனால் அதை யாரும் பிரயோஜனப்படுத்திக்கொள்ளவில்லை.

55. பிரியமானவர்களே, என் மடியில் மூலாம் பூசப்பட்ட தங்கம் அல்ல, சுத்தத் தங்கம். ஆதலால் நான் எதற்கும் கவலைப்படுவதில்லை. எந்த வழக்கையும் என்னால் பரிசுத்த ஆவியின் ஒத்தாசையினால், தேவனுடைய கிருபையினால் எதிர்த்து நின்று சமாளிக்க முடியும்.

56. பிரியமானவர்களே, நீங்கள் இக்காலத்திற்குரிய செய்தியை சரியான ஒரு கண்ணோட்டத்தில் கண்டால் அது உங்களை சத்தியத்திற்கு வழிநடத்தும். வித்தியாசமான ஒரு கண்ணோட்டத்தில் பார்ப்பீர்களானால் அது உங்களை திசைதிருப்பிவிடும் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்தவிரும்புகிறேன். இன்று அநேகர் செய்தியை ஒரு தவறான கண்ணோட்டத்தில் காண்பதால்தான் பற்பலவிதமான மாறுபாடான போதனைகள் சபையில் காணப்படுகின்றன. இக்காலத்திற்குரிய செய்தியை தவறான கண்ணோட்டத்தில் பார்த்ததினால்தான் பிரன்காம் கிறிஸ்து உபதேசம் வந்தது. அது அநேகரை இடறச் செய்தது. அக்கினி ஸ்தம்பம், மேகஸ்தம்பம் தோன்றியது. அதைக் கொண்டு பணம் சம்பாதித்தனர். கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய பாஸ்டர், சுவிசேஷகன் என்று கூறிக்கொண்டு பலர் 1963-ல் கர்த்தருடைய வருகை வந்துவிட்டது, எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டது, நாம் ஆயிரம் வருடம் அரசாட்சியில் இருக்கிறோம் என்று பற்பல உபதேசங்களினால் மக்களை வஞ்சித்து வருகிறார்கள்.

57. பிரியமானவர்களே, காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக. நான் தேவனுக்கு செவிக் கொடுக்கிறதைப் பார்க்கிலும், பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாருக்கும், அவருக்கு துதிபாடும், பாஸ்டர் வணக்கம் கொண்ட அவரது சபையாருக்கும் செவிகொடுக்கிறது, தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று அவர்களே நிதானித்துப் பார்க்கட்டும். தேவனுடைய சபையில் நானே என் கண்களால் கண்ட காதுகளால் கேட்ட தவறான கொள்கை, கோட்பாடு, உபதேசங்களை கண்டிக்காமல் இருக்கக்கூடாது. கண்டிப்பதே என் பணியின் ஒரு அம்சம் ஆகும். நான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைவதற்கு என்னை சுவிசேஷகனாக ஏற்படுத்தியவருக்கே கீழ்ப்படிகிறது அவசியமாயிருக்கிறது.

58. சென்னை சபையில், தீர்க்கத்தரிசியின் செய்தியை படிக்கலாம்; ஆனால் பாஸ்டர் உபதேசத்தைக் கேட்டு அதன்படி மாத்திரமே நடக்க வேண்டும், மற்றவர்களுடைய செய்திகளை படிக்கக்கூடாது; இதர ஊழியக்காரர்களின் உபதேசங்களைக் கேட்கவும் கூடாது என்ற ஒரு வெட்கக்கேடான போதனை உண்டு. இது பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாரின் சாதுரியமான, தந்திரமான செயல். சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகை செய்யும் செயல். இவர் ஐந்து வகை ஊழியங்களை அங்கீகரிப்பது இல்லை. சகோ.பிரன்காம் செய்தி மற்றும் தனது ஊழியம் சபை பக்திவிருத்திக்கு போதுமானது என்ற கோட்பாடு உடையவர். இது ஒரு தவறான போதனை. மக்களை ஏமாற்றி தன் ஆதிக்கத்திற்குள் வைத்துக் கொள்ள விரும்பும் தந்திரமான உபதேசம். பிரியமானவர்களே, தேவவசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை. 2தீமோ.2:9. நீங்கள் பாஸ்டர் என்று தன்னை அழைத்துக்கொள்ளும் ஒரு மனிதனுடைய கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருப்பது என்ன? இது உங்களுக்குள் இன்னும் அடிமைத்தனத்தின் ஆவி குடியிருப்பதைக் காட்டுகிறது. இக்காலத்திற்குரிய செய்தியிலுள்ள மக்கள் நல்லவர்கள். அவர்கள் மீது எனக்கு நம்பிக்கை உண்டு. அவர்கள் சார்ந்திருக்கும் சபை பாஸ்டர்கள், அவர்களைச் சுற்றி வேலி போட்டிருப்பதால், அவர்கள் சத்தியத்தை அறிந்துக்கொள்ள தருணம் கிடைப்பதில்லை. பிரியமானவர்களே நீங்கள் சுயாதீனராயிருங்கள். ஒரு மனிதனுக்கு அடிமைகளாகாதீர்கள்.

59. **இக்காலத்திற்குரிய செய்தியிலுள்ள சகோதரர்கள் ஒருவருக்கொருவர் ஐக்கியம் கொள்ளவே விரும்புகின்றனர். ஆனால் அவர்கள் வெவ்வேறு கூடுகளில் அடைக்கப்பட்டிருப்பதால் ( கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சபை, கல்வாரி ஜெபவீடு, ஏல்பெத்தேல், மணவாட்டி கூடாரம், சென்னை சபை, கல்வாரி சபை, இயேசுகிறிஸ்துவின் ஜெப வீடு. இவைகள் யாவும் என்ன? அந்த கூடுகள் தான்) இவர்களால் ஒருவருக்கொருவர் ஐக்கியம் கொள்ளமுடியாமல் போயிற்று. நாம் எல்லாரும் அவர்கள் கூடுகளை விட்டு வெளியே வந்து, கிறிஸ்துவின் உண்மையான அன்பை இருதயங்களில் பெற்றுக்கொண்டவர்களாய், ஒருவரோடொருவர் ஐக்கியம் கொள்ளவேண்டும். இது குறித்து ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல் செய்தியில் பத்தி 19ஐ தியானியுங்கள்.** இதற்காக தான் நான் உங்களை அன்பின் விருந்துக்கு அழைத்தேன். ஆனால் உங்களுக்கோ வர மனம் இல்லை. அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். 1யோ.1:7

60. பிரியமானவர்களே, சபை பக்திவிருத்திக்கு இக்காலத்திற்குரிய செய்தி மட்டும் போதாது ஒரு பாஸ்டருடைய வழிநடத்துதல் மட்டும் போதாது, இதர ஊழியங்களின் போதனைகளும், ஆலோசனைகளும், வழிநடத்துதலும் தேவை. ஐந்து வகை ஊழியங்களின் பலன்களும் தேவை. அப்பொழுதுதான் நீங்கள் ஆரோக்கியமான முழு உணவு சாப்பிட்டவர்களாவீர்கள். அதுதான் உங்கள் சரீரத்தை பூரண வளர்ச்சிக்குக் கொண்டு வரும். பாஸ்டர் மட்டும் போதும் என்று நினைப்பீர்களானால் உங்கள் சரீரம் பூரண வளர்ச்சியடையாது. ஆதலால் உங்கள் பாஸ்டரின் ஏமாற்று வலையில் விழுந்துவிடாதீர்கள். அவரை மட்டும் சார்ந்திருப்பீர்களானால் அது உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியை மட்டுப்படுத்தும்.

61. நான் என் சகோதரர்களுக்கு விரோதமாயிருப்பதாக அநேக முறை பலர் எண்ணுகிறார்கள். அது அப்படி அல்ல என்று தேவன் அறிவார். உண்மை எது என்று அவர் அறிந்திருக்கும் வரைக்கும் எனக்கு ஒன்றும் இல்லை. பாருங்கள், நான் சகோதரர்களுக்கு விரோதமாயில்லை. முறைமைகள் தான், உபதேசங்கள் தான் நாம் சகோதரர்களாயிராதபடிக்குச் செய்துவிடுகின்றன. தேவனுடைய வார்த்தை, அப்போஸ்தலர் தீர்க்கத்தரிசிகளின் உபதேசங்கள் நாம் சகோதரர்களாயிராதபடிக்கு நம்மை பிரித்துவிடுவதில்லை. மாறாக நம்முடைய சொந்த முறைமைகளே, கொள்கைகளே, கோட்பாடுகளே, உபதேசங்களே அவ்வாறு செய்கின்றன. அது உண்மை. அது தான் உண்மை. உதாரணமாக பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாரின் திருமண முத்தம், மாலை வேளையில் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரித்தல், பெண்கள் சுடிதார் ஆடைகள் அணியக்கூடாது போன்ற கோட்பாடுகள், கர்த்தருடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக என்ற தவறான தமிழ் மொழிப்பெயர்ப்பு நம்மை பிரிக்கிறது பாருங்கள்.

62. முடிவாக, பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் அவர்களே, ஏதோ உங்கள் சபையில் சுமார் 200 பேர் கூடுகிறார்கள் (இதில் முடிவுபரியந்தம் நிலைத்திருப்பது ஒன்றோ, இரண்டோ அல்லது பூஜ்ஜியமோ, அதைக் கர்த்தர் அறிவார்) என்ற ஆணவத்தில், உங்கள் மனம் போல் தேவனுடைய வார்த்தைக்கு, இக்காலத்திற்குரிய செய்திக்கு விளக்கம் கொடுத்து முரணாக நடந்துகொண்டு, இறுமாப்பாய் சுதந்தரத்தை ஆளுகை செய்து. உங்கள் சுயஇச்சைகளின்படி, இஷ்டப்படி தேவனுடைய வார்த்தையில் இல்லாத, இக்காலத்திற்குரிய செய்தியில் இல்லாத காரியங்களை உபதேசங்களாகத் தேவனுடைய சபைக்குள் கொண்டு வந்தால் அதற்கு எதிராக ஒரு குரல் எங்கிருந்தாவது நிச்சயமாக ஒலித்துக் கொண்டிருக்கும். அந்தக் குரலை உங்களால் ஒடுக்கமுடியாது. தவறுக்கு நான் எதிர்த்து நிற்கவேண்டியவனாயிருக்கிறேன். அது குறித்து மற்றவர்கள் என்ன சொன்னாலும் எனக்கு கவலையில்லை. அன்று கூட இயேசுவை சிலர் இவர் நல்லவர் என்று கூறினார்கள். வேறு சிலர்அப்படி அல்ல, இவன் ஜனங்களை வஞ்சிக்கிறவன் என்று கூறினார்கள். ஒரு மனிதனைப் பற்றி இரு கருத்துக்கள். நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள் அவரை விசுவாசித்தார்கள். இடறுகிறதற்கென்று நியமிக்கப்பட்டவர்கள் இடறினார்கள். அவ்வண்ணமாகத் தான் கர்த்தர் எனக்குக் கொடுத்த ஊழியத்தை பொறுத்தளவிலும் சிலர் ஆதரிக்கிறார்கள், சிலர் தூற்றித்திரிகிறார்கள், சிலர் இடறுகிறார்கள். யார் எப்படி நடந்துக்கொண்டாலும் நான் தவறுக்கு விரோதமாக குரல் கொடுக்கவேண்டியவனாயிருக்கிறேன்.

63. தேவஅநுக்கிரகத்தால் கர்த்தர் எனக்குக் கொடுத்த ஊழியத்தை 1978 முதல் செய்து வருகிறேன். அன்று முதல் இன்று வரை கர்த்தரே எனக்குத் துணையாக நின்று வருகிறார். ஆதலால் நான் மனுஷர்களுக்குப் பயப்படேன். அவர்களுடைய பயமுறுத்துதலைக் குறித்து ஒன்றுக்கும் கவலைப்படேன். என் ஓட்டத்தை சந்தோஷத்தோடே முடிக்கவும், கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய தேவனுடைய ஆலோசனைகளில் ஒன்றையும் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் தேவனுடைய சபைக்கு அறிவித்து, கர்த்தர் எனக்குக் கொடுத்த ஊழியத்தை அவருடைய கிருபையினால் நிறைவேற்றி வருகிறேன்.

64. பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் அவர்களே, உங்களிலும் சிலர் எழும்பி மாறுபாடானவைகளை போதிப்பார்கள் என்ற பவுலின் வார்த்தையை மறந்துவிடாதீர்கள். இந்த சுயஇஷ்டமான, மாறுபாடான போதனைகளில் ஒன்று தான் திருமண முத்தம். மற்றொன்று உங்கள் மாலை வேளையில் கர்த்தருடைய

இராப்போஜனத்தை ஆசரிப்பது. இன்னும் உங்களுடைய மாறுபாடான உபதேசங்கள் அநேகம் உண்டு. அவைகளை நேரம் வரும்போது தேவனுடைய சபைக்கு செய்தித்தொகுப்பாக எழுதி வெளிப்படுத்துவேன்.

**65. தேவனுடைய உண்மையான ஊழியன் ஒவ்வொருவனும் தேவனுடைய வார்த்தைக்கு உண்மையுள்ளவனாயிருக்கவே விரும்புவான். நீங்கள் அவ்வாறே அதற்கு உண்மையாயிருக்கவேண்டும். நீங்கள் உண்மையாயிராவிடில், அதற்கு எதிராக ஒரு சத்தம் எங்கோ கூச்சலிட்டுக்கொண்டேயிருக்கும் (அவருடைய வருகையின் அடையாளமாகப் பிரகாசிக்கும் சிகப்பு விளக்கு, பக்கம் 50, பத்தி 147) பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் அவர்களே பல்லாவரம், பொழிச்சலூர் பகுதிகளிலுள்ள பாஸ்டர்களே இப்பொழுது உங்களுக்கு இக்காலத்திற்குரிய செய்தி புரிகிறதா?**

66. சகோ. ஐசக் வசந்தக்குமார் தன்னை ஒரு பாஸ்டர் என்று அழைத்துக்கொண்டு, நான் கிறிஸ்துவை அறியாத மக்கள் மத்தியில் சென்று ஊழியம் செய்யப்போகிறேன், மலைகளிலும், காடுகளிலும் வாழும் பழங்குடி மக்கள் மத்தியில் ஊழியம் செய்யப்போகிறேன் என்று கூறி அடிக்கடி பல இடங்களுக்கு பிரயாணம் செய்து கொண்டிருக்கிறார். இவர் செய்யும் இந்த ஊழியம் ஒரு பாஸ்டருடைய ஊழியமா? இவர் தன் ஸ்தானத்தையே அறியவில்லையே. ஊழியத்தில் தன் ஸ்தானத்தை அறியாத ஒரு நபர், எப்படி தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கமுடியும்? அவர் தன்னைத் தான் பாஸ்டராக்கிக் கொண்டார். ஐந்து வகை ஊழியம் கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்கள் பூரணபடத்தானே. பாஸ்டரது ஊழியம் ஒரு மந்தைக்கு உட்பட்டது. அந்த மந்தையை விட்டுவிட்டு அவர் எங்கும் செல்லக்கூடாது. ஊழியத்தினிமித்தமாக ஒரு பாஸ்டர் எங்கும் ஊர் சுற்ற வேண்டிய தேவையேயில்லை. அது பாஸ்டரது ஊழியம் அல்ல. கர்த்தர் அதற்கு இதர ஊழியங்களை வைத்திருக்கிறார். பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் தன் ஸ்தானத்தை அறியாததினால் தன் மனம்போனபோக்கில் தேவனுடைய சபையில் வேற்றுமையான உபதேசங்களைப் போதித்து, இது என் சபைக்குரியது என்று அநாகரீகமாகப் பேசுகிறார்.

67. பாஸ்டர் சகோதரரே உங்களுடைய புகழ்ச்சி நீங்கள் உங்கள் சாதுரியமான பேச்சினால், திறமையினால் கவர்ந்து ஆதாயப்படுத்திவைத்திருக்கும் 200 பேர்களால் உண்டாயிராமல் தேவனால் உண்டாயிருக்கட்டும். அன்று 20 லட்சம் பேர்களில் 2 பேர்கள் தான், அப்படியானால் உங்கள் 200 பேர்களில் எத்தனைப் பேர்கள்? அப்படியானால் இந்த 200 பேர்கள் எம்மாத்திரம்? ஆதலால் மிகமிக மிஞ்சிப் போகாமல் கர்த்தருடைய கரங்களுக்குள் அடங்கியிருங்கள். **கூடுமானால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும், இந்தக் கூட்டமானது தொடர்ந்து நம்முடனே கூட வருகிறதாயிருக்கிறது. சகோதரனே அல்லேலூயா! தேவனுக்கு மகிமை! என்று அவர்கள் கூறினாலும், எதற்காக அதை கூறுகிறார்கள் என்பதை நீ உன் உள்ளத்தில் அறிந்திருப்பாய். ஒருகூட்ட ஜனங்களிடமிருந்து எல்லாப் பணத்தையும் பிழிந்து எடுப்பதற்காக அவர்கள் அவ்விதம் கூறுகிறார்கள்.** (மூவகை விசுவாசிகள், பத்தி 244).

68. திருமணம் முத்தம் என்ற உபதேசம் தேவனுடைய சபையில் நுழைக்கப்பட்டதன் நோக்கம் என்ன? எதற்கும் ஒரு நோக்கம் வேண்டும். நோக்கமில்லாமல் உபதேசம், போதனை எதுவும் இல்லை.
கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம், இதற்கு ஒரு நோக்கம் உண்டு.
கர்த்தருடைய இராப்போஜனம், இதற்கு ஒரு நோக்கம் உண்டு.
கால்களை கழுவுதல், இதற்கு ஒரு நோக்கம் உண்டு.
ஸ்தீரியின் தலை முக்காடு, இதற்கு ஒரு நோக்கம் உண்டு.
திருமண முத்தம் உபதேசம் நாம் கர்த்தரை பற்றிக்கொண்டிருக்க தேவையா? இல்லை.
இந்த உபதேசம் நம் சுயபிரயோஜனத்திற்குத் தேவையா? இல்லை.
இந்த உபதேசம் ஒருவனுடைய ஆத்துமா இரட்சிப்புக்குத் தேவையா? இல்லை.
இந்த உபதேசம் பூர்வ காலத்து மறைபொருளாக இருந்து, இப்பொழுது பரிசுத்தவான்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட ஒன்றா? இல்லை.
இந்த உபதேசம் கர்த்தருக்குப் பயந்தவர்களிடத்தில் இருந்த கர்த்தருடைய இரகசியமா? இல்லை.
இது சென்னை பாஸ்டர் அறிந்துகொள்ளும்படி அருளப்பட்ட தேவனுடைய இராஜ்யத்தின் இரகசியமா? இல்லை.
ஆதி காலமுதல் அடக்கமாயிருந்து, அநாதி தேவனுடைய கட்டளையின்படி வெளியாக்கப்பட்ட சுவிசேஷத்தின் இரகசியமா? இல்லை.
திருமண முத்தம் நீதிமான்களோடு இருந்த தேவஇரகசியமா? இல்லை.
**மாறாக இது இச்செய்தித்தொகுப்பு மூலம் வெளியரங்கமாக்கப்பட்ட அக்கிரமத்தின் இரகசியம் ஆகும்.**
ஆக இது ஒருவனுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கும், இந்த உலகப் பிரகாரமான ஜீவியத்திற்கும் தேவையான ஒன்று இல்லை. இப்படியிருக்க இந்த உபதேசம் தேவனுடைய சபையில் எதற்கு?
இவ்வாறாக அனைத்து உபதேசங்களுக்கும் ஒரு நோக்கம் உண்டு. ஆனால் திருமண முத்தத்திற்கு நோக்கம் என்ன? மாறாக திருமண முத்தம் ஒரு நாட்டின் கலாச்சாரம். இது தேவனுடைய சபையில் உபதேசமாக இருக்க தகுதியற்ற ஒன்று. இதைக் கடைப்பிடிப்பதினால் ஒரு மேன்மையும் இல்லை. கடைப்பிடிக்காதிருப்பதினால் ஒரு குறைவும் இல்லை. பலவீனம் உள்ள ஒரு இந்திய விசுவாசி இடறுகிறதற்கான ஒன்று. பலவீனமுள்ள அவனுடைய மனச்சாட்சியை புண்படுத்துகிறதினாலே பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் கிறிஸ்துவுக்கு விரோதமாக பாவம் செய்கிறார். தன் மாம்சசிந்தையிலே வீணாய் இறுமாப்புக்கொண்டிருக்கும் இவர் உங்கள் பந்தயப் பொருளை நீங்கள் இழந்துப் போகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப்பாருங்கள்.

69. சகோதரரே உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய் பெருகவும் தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி, நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன். **தேவனுடைய சபையில் ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள்.** கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும் தேவனுடைய அன்பும் பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்களனைவரோடுங் கூட இருப்பதாக ஆமென்.

அக்டோபர், 2004 (2)

கிறிஸ்துவின் அன்பில்
**சகோ.காலேப் யோசுவா**